Registered as a News Paper

பொழிவு 27
குவிப்பு 05
பக்கங்கள் 08
விலை 50/=
கார்த்திகை

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR – KALAIYARUVI, SOCIAL COMMUNICATION CENTRE MANNA PAPER OFFICE NO.202 THALIMANNAR ROAD, SRI LANKA
Telephone No. 023 2250789 / 076 3801841 E-Mail mannamnrc@gmail.com, Web. www.manna.lk, FB-Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2022"

ஒரு கூட்டொருங்கியக்கத் திரு அவைக்காக 41 வது புதிய ஆண்டு

# ஒரு கூட்டொருங்கியக்கத் திரு அவைக்காக ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி



## இறைவனின் இரக்கத்தாலும் புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆகிய நாம் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

## திருவருகைக் கால திருமடல்

இயேசுக்கிறிஸ்துவில் அன்பு மிக்க சகோதரசகோதரிகளே,

"நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!" (கலாத்தியர் 1:3).

**திருவருகைக் காலம்**

உலக மீட்பராம் இயேசுவினுடைய பிறப்பின் பெருவிழாவுக்கு நம்மை ஆயத்தம் செய்யும் காலமாக இத்திருவருகைக்காலம் நமக்குத் தரப்பட்டுள்ளது. இந்தத் திருவருகைக்காலத்தில் நாம் இயேசுவினுடைய இரண்டுவிதமான வருகைக்காக நம்மை ஆயத்தம் செய்ய அழைக்கப்படுகின்றோம். ஒன்று வரலாற்றில் ஏற்கனவே நடந்தேறிய இயேசுவின் முதலாவது வருகை. இதுவே இயேசுவினுடைய மனிதாவதாரப் பிறப்பு. இந்த வருகையின்போது இயேசு மீட்பராக, இரட்சகராக வந்தார். இதையே நாம் கிறிஸ்மஸ் விழாவாகக் கொண்டாடுகின்றோம். இரண்டு. இனி நடைபெறும் என்று நாம் எதிர்பார்த்திருக்கும் இயேசுவினுடைய இரண்டாவது வருகை. இந்த வருகையின்போது இயேசு நடுவராக, நீதிபதியாக வருவார்.

இத்திருவருகைக் காலத்தில் அன்னையாம் திருச்சபை நமக்குத் தரும் திருப்பலி வாசகங்கள் இந்த இரண்டு வகையான வருகைக்கும் நம்மை ஆயத்தம் செய்யும் வகையில் அமைந்துள்ளன. எனவே இத்திருவருகைக் காலத் திருப்பலி வாசகங்களை நன்கு வாசித்து தியானிப்பது முக்கியமாகும். நம் கடவுளின் இரக்கப் விண்ணின் விடியலாகிய இயேசுவை வரவேற்க ஆன்மீக ரீதியில் நம்மை ஆயத்தம் செய்வோமாக.

**கூட்டொருங்கியக்கத் திரு அவையை நோக்கிய பயணம்**

நாம் அனைவரும் கூட்டொருங்கியக்கத் திருச்சபையாக மாறும் பயணத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். கூட்டொருங்கியக்கத் திருச்சபையாக மாறவேண்டும் என்ற நமது திருத்தந்தையின் அறைகூவலை ஆண்டவரிடமிருந்து பெறுகின்ற ஓர் அழைப்பாகவே நாம் கொள்ள வேண்டும். நம்மிடையே இருக்கக்கூடிய வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையும், ஒன்றிப்பும் நிறைந்த திருச்சபையாக நாம் மாற அழைக்கப்பட்டுள்ளோம்.

உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்புப் பணிகளை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நாம் ஆரம்பித்தோம். **"ஒரு கூட்டொருங்கியக்கத் திரு அவைக்காக : ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி"** என்ற இந்த உலக ஆயர்கள் மாமன்றத்தின் கருப்பொருளுக்கு அமைவாக கடந்த ஒரு வருடமாக நாம் பல்வேறு நிலைகளில் தயாரிப்பு முயற்சிகளை முன்னெடுத்து வந்துள்ளோம். இதற்குப் பொறுப்பான மறைமாவட்டக் குழுவினர் பங்குகளுக்கு பயணம் செய்து மீளாய்வுகளை நடத்தியுள்ளனர். அதேபோன்று மறைமாவட்ட ஆணைக் குழுக்களின் மீளாய்வுகளும் பெறப்பட்டுள்ளன. இந்த மீளாய்வு முயற்சிகளின் முத்தாய்ப்பாக இம்மாதம் (நவம்பர்) 14ஆம் திகதி மறைமாவட்ட மட்ட மீளாய்வு ஒரு நாள் நிகழ்வாக மன்னாரில் நடைபெற்றது. இதில் அனைத்துப் பங்குத்தந்தையர்கள், ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள், துறவற இல்லங்களின் பிரதிநிதிகள் மற்றும் பங்கின் பொது நிலைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

கூட்டொருங்கியக்க ஆயர்கள் மாநாடு 2023ஆம் ஆண்டுகூட்டொருங்கியக்க ஆயர்கள் மாநாடு 2023ஆம்

2

# வாழ்த்துகின்றோம்



கல்வித்துறையில்
முதுதத்துவமாணி
(M.Phil. in Education)
பட்டத்தினை பெற்றுள்ள
அருட்பணியாளர்
ம.அன்ரன் ஜெயசீலன்
அடிகளாரை
பாராட்டி வாழ்த்துகின்றோம்,
அவரது பணி
மென்மேலும் சிறந்து
விளங்க இறையாசீர்
வேண்டி நிற்கின்றோம்.

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் அறிக்கை



## கிறிஸ்து பிறப்பு விழாவில் இயேசுவை தீவனத் தொட்டியில் கண்டுகொள்வோம்

நாங்கள் மீண்டும் கிறிஸ்து பிறப்பு விழாவின் வாசலில் நிற்கின்றோம். எனவே, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி, பூவுலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி" என இறைதூதர்கள் பாடிய பாடலைப் பாடி மகிழ நாம் அழைக்கப்படுகிறோம் (லூக்கா 2:14). கிறிஸ்து பிறப்பு கடவுள் மனிதகுலத்தை எவ்வளவு நேசிக்கிறார் என்பதையும், அவர் நமக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. எனவே நம்மை மீட்பதற்காக அவர் நம்மில் ஒருவராகப் பிறக்கத் திருவுளம் கொண்டதை இந்த கிறிஸ்து பிறப்பு விழா வெளிப்படுத்துகின்றது.

மேலும் அவர் வறுமையில் பிறக்கத் திருவுளமானார். எனவே கிறிஸ்துவின் பிறப்பு தாழ்நிலை தீவனத்தொட்டியில் நிகழ்ந்தது. இப்புனித பிறப்பு நமக்கு முன்வைக்கும் வாசகங்களை முழுமையாக பிரதிபலிக்க முடியாது. கடவுள் நம் தனிமையில் முடிந்தவரை நெருக்கமாக இருக்க விரும்புகிறார். இம்மானுவேல் என்னும் கிறிஸ்து பிறப்பு நாம் தனித்து இல்லை என்று நமக்கு உறுதியளிக்கிறார். கடவுள் ஏழைகளில் மனிதனாக மாறுகிறார். அவர்களில் ஒருவராகிறார். ஆகவே தான் தாழ்நிலை தீவனத் தொட்டியில் அவர் பிறந்தார். இவ்வாறு கிறிஸ்து பிறப்பின் மறைபொருளானது இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய தாழ்நிலை தீவனத் தொட்டிக்குச் செல்லும் அழைப்பாகும். எனவே, ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பிலும் நாம் அந்தத் தீவனத் தொட்டிக்குச் சென்று ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் நம்பிக்கையற்றவர்களிடம் அவரைத் தேடவேண்டும். குறிப்பாக இது போன்ற நேரத்தில் நம் நாட்டைப் பிடித்துள்ள பயங்கரமான பொருளாதார நெருக்கடியில் வாழ்வதற்கே போராடிக்கொண்டிருக்கும் ஏழைகளின் நிலை நம்மைத் தொட வேண்டும். ஏழைகளுடன் நம்மை

2

# திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தல்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். 10.12.2022 (சனிக்கிழமை காலை 9.00மணிக்கு மன்னார் மாவட்ட ஆயர் பேரருட்திரு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தலைமையிலான திருப்பலி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் நடைபெற்றது.

அருட்சகோதரர்களான புனித அங்காமத்து மாதா ஆலயம் பெரியகுஞ்சுக்குளம் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் P.ஸ்ரனி(IVD), புனித செங்கோல் மாதா ஆலயம் முத்தரிப்புத்துறை பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் றஜீவன் லியோன், புனித நற்கருணை நாதர் ஆலயம் யோசவ்வாஸ் நகர் பங்கைச்சேர்ந்த அருட்சகோதரர் ஜெல்த்சின் சார்லஸ், மற்றும் புனித வெற்றி நாயகி ஆலயம் பேசாலை பங்கைச் சேர்ந்த அருட்கோதரர் பிராங்லின் (IVD) ஆகிய நான்கு அருட்சகோதர்கள் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். இவ்வருட்சகோதரர்களை மன்னா சார்பாக வாழ்த்துகின்றோம்

# ஒரு நாளில் 51 கன்னியர்கள் வாக்குத்தத்தைப் பெற்றுக்கொண்டனர்



22.11.2022 அன்று 51 கன்னியர்கள் வியட்நாமில் உள்ள திருச்சிலுவை கன்னியர் சபையின் அன்பர்களின் சகோதரிகள் வின்ஹ் அவர்களின் தலைமையில் தங்கள் உறுதிமொழிகளை உறுதியுடன் எடுத்துக்கொண்டனர். இந்த வருடத்தில் ஒரே நாளில் அதிகளவான வாக்குத்தத்தப் பெற்றுக்கொண்ட அருட்சகோதரிகள் இவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னா

எமது கத்தோலிக்க திருஅவையானது இறந்த விசுவாசிகள் அனைவரையும் நினைந்து அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக கார்த்திகை மாதம் முழுவதும் இறைவேண்டல் செய்ய எமக்கு சிறப்பானதொரு அழைப்பை விடுக்கின்றது. இம்மாதத்தில் நாம் இறந்தோரை நினைவு கூர்ந்த அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு பரிகாரம் பெற்று விண்ணக பேரின்ப நிலையை அடைய எமது செபங்கள், நற்கிரியைகள், தானதருமங்கள் வழியாக இறைவேண்டல் செய்வோம். அத்துடன் இன்றைய அதிநவீன சூழலில் எம் சமூகங்களில் உருப்பெற்றுள்ள பாரியதொரு சவால் " பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமை" ஆகும். இன்று இலங்கையில் போதைவஸ்து என்பது மனித வளர்ச்சியில், பண்பாட்டில், பழக்கவழக்கத்தில் பாரிய எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி சகல மனித நேயமும், உடல்உள நலமும் பாழாய்ப் போகும் ஒரு இருள்மயமான சமூகம் உருவாகிவருவது நாம் வாழும் சூழலையும் வெகுவாய்ப் பாதிக்கும் என்பதை பலர் இப்போதே அனுபவித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இதைவிட மானிட உருவாக்க களமாக இருக்கும் கற்றல் மூல வள நிலையமாக இருக்கின்ற சமூக உருவாக்க நிலையமான பாடசாலைகளில் போதைவஸ்து பொருட்கள் மாணவர் விளங்கிக் கொள்ளாத வகையில் அவர்களுடைய விருப்ப உணவுகளால், இனிப்பு பொருள் போன்ற பல உருவ அமைப்பில் கள்ளத்தனமாகவும், கவர்ச்சிகரமாகவும், இலவசமாகவும் ஆண் பெண் என்று பாராமல் ஒரு குழுமம் பாடசாலையை அண்டிய பகுதிகளில் திரிந்து கொண்டு வெற்றியும் கண்டமையுமான அபாயகரமான செய்திகள் இன்று எங்கும் எவ் ஊடகங்களிலும் கேட்கக் கூடியதாக பார்க்க கூடியதாக உள்ளது. இதில் பாடசாலை அமைப்புக்கள், பெற்றோர்கள் விழித்தெழ வேண்டும். ஆகவே மாணவ வழிப்படுத்தல் முக்கியமானதாகும் உள ஆற்றப்படுத்தல் பிரிவு பாடசாலையில் தீவிர பங்களிப்பு செய்ய வேண்டும். மாணவரகள் பக்குவமாக கையாளப்பட எதிர்பார்க்கப்படுகிறது. போதை நிலை தொடர்பாக மாணவரை உளவளத் துறையினர் மாணவரின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு கையாளப்பட வேண்டும். நாளாந்தம் பாடசாலையில் நேர்மனப்பாங்கான அறிவுறுத்தல்கள் சுலோகங்கள் பதாதைகள் காட்சிப்படுத்தி மாணவரை உள ஆற்றுப்படுத்தி வழிப்படுத்த பாடசாலைச் சமூகத்தை முற்றுமுழுதாக மக்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே எமது மாணவர் சமூகத்தின் நலனில் நாம் விழித்தெழுவோம். அவர்களுக்கு நல் வழிகாட்டுதலை நாம் வழங்குவோம். மாணவர் சமூகம் இறை அன்பிலும் நன்நெறியிலும் வளர்ந்திட எமது செபங்களில் அவர்களைத் தாங்கிக் கொள்வோம்

எனவே எமது மாணவர் சமூகத்தின் நலனில் நாம் விழித்தெழுவோம். அவர்களுக்கு நல் வழிகாட்டுதலை நாம் வழங்குவோம். மாணவர் சமூகம் இறை அன்பிலும், நன்நெறியிலும் வளர்ந்திட எமது செபங்களில் அவர்களைத் தாங்கிக் கொள்வோம்.

ஆகவே இம் மாதத்தில் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று விசேட தேவைகளையும் எமது செபங்களில் தாங்கிக் கொண்டவர்களாக தொடர்ந்தும் பயணிப்போம்.

கிறிஸ்துவில் அன்புள்ள

அருட்பணி. ம.செல்வநாதன் பீரிஸ்.

## திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தல்




யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு 29ஆம் திகதி சனிக்கிழமை யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. அருட்சகோதர்களான ஜோன் கனிசியஸ் மற்றும் ராஜ் டிலக்சன் ஆகியோர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தலைமையில் அங்கு நடைபெற்ற திருச்சடங்குத் திருப்பலியில் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## அர்ப்பண வாழ்வின் 50 வது ஆண்டு நிறைவு



வணக்கத்துக்குரிய அருட்சகோதரி மேரி புஸ்பராணி (AC) அவர்களின் துறவற அர்ப்பண வாழ்வின் 50 வது ஆண்டு நிறைவு 29.10.2022 அன்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்சகோதரி அவர்களை மன்னார் மறைமாவட்டம் வாழ்த்தி நிற்கிறது.

## திருக்குடும்பக் கன்னியர் சபையின் இலங்கைக்கான பொறுப்பாளர்



திருக்குடும்ப சபையின் சபைத்தலைமைத்துவ குழுவின் இலங்கைக்கு பொறுப்பான ஆலோசகர் அருட்சகோதரி ஜெனி 24.11.2022 அன்று மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்குடும்ப அருட்சகோதரிகள், திருக்குடும்ப பொது நிலையினரை மன்னார் திருக்குடும்ப இல்லத்தில் சந்தித்தார்.

## திருவருகைக்காலத் திருமடல்....

1ம் பக்க தொடர்ச்சி.......

ஆண்டு நடைபெறுவதற்கான பூர்வாங்க ஆயத்தங்கள் பல்வேறு நிலைகளில் முன்னெடுக்கப்பட்டுவந்த போதிலும் இந்த ஆயர்கள் மாநாட்டினை எதிர்வரும் 2024ஆம் ஆண்டே நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார். ஓராண்டு இம்மாநாட்டினைப் பிற்போடுவ தனால் மிக ஆறுதலாக விடயங்களை ஆராய்ந்து நல்ல முடிவுகளை திருஅவை எட்டலாம் என்பதே இதற்கான காரணம் என திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார். இவ் ஆயர்கள் மாநாடு இரு நிலைகளில் ஒக்ரோபர் மாதம் 2023இலும் ஒக்ரோபர் மாதம் 2024இலும் வத்திக்கானில் நடைபெறும் எனத் திருத்தந்தை மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி நாமும் நமது முயற்சிகளை ஆழப்படுத்தி, பன்முகப்படுத்தி இன்னும் அதிக உற்சாகத்துடன் இப்பயணத்தில் பங்கெடுப்போமாக.

**நாட்டின் இன்றைய சூழ்நிலை.**

இன்று இலங்கை நாடு என்றுமில்லாதவாறு பொருளாதார ரீதியில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. பொருட்கனின் விலைகள் மலைபோல் உயர்ந்துள்ளன. இந்தப் பாரிய விலை உயர்வினால் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் நாளாந்த உணவிற்கே அல்லல்படுகின்றனர். பொருட்களின் விலைமட்டுமல்ல அத்தியாவசியச் சேவைகளின் கட்டண உயர்வு காரணமாகவும் சாதாரண மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இயேசுவின் பிறப்புக்காலத்தை முன்னிட்டு இலங்கை ஆயர்கள் பேரவை விடுத்துள்ள செய்தியில் இக்காலகட்டத்தில் நமக்கு விடுக்கப்படும் அழைப்பு என்ன என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதனாக மாறுகிறார். அவர்களில் ஒருவராகிறார். ஆகவேதான் தாழ்நிலைத் தீவனத்தொட்டியில் அவர் பிறந்தார். இவ்வாறு கிறிஸ்து பிறப்பின் அழைப்பானது இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய அந்தத் தீவனத் தொட்டிக்குச் செல்லும் அமைப்பாகும். எனவே ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பிலும் நாம் அந்தத் தீவனத்தொட்டிக்குச் சென்று ஏழைகள் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் அவநம்பிக்கையானவர் களிடம் அவரைத் தேடவேண்டும். குறிப்பாக இதுபோன்ற நேரத்தில் நம் நாட்டைப் பீடித்துள்ள பயங்கரமான பொருளாதார நெருக்கடியில் வாழ்வதற்கே போராடிக் கொண்டிருக்கும் ஏழைகளின் (நிலை நம்மைத் தொட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரச் சிக்கலினால் சொல்லொணாத் துன்பத்தில் வாழும் மக்கள் மட்டில் நாம் அக்கறைகாட்ட அழைக்கப்படுகின்றோம், கிறிஸ்மஸ் விழாவையொட்டி தேவையற்ற ஆடம்பரங்களைத் தவிர்ப்பதன் மூலம் தேவையில் உள்ளவர்களுக்கு நம்மாலான உதவிகளைச் செய்ய முன்வருவோம்.

மேலும் தமது உரிமைக்காக ஜனநாயக வழியில் போராடுகின்றவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து மாதக்கணக்கில் சிறையில் அடைத்து வைக்கும் கொள்கையை இன்றைய அரசு கைக்கொண்டு வருகின்றது. இது கண்டிக்கத்தக்கது. மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்புக்கொடுக்குமாறு இன்றைய அரசாங்கத்திற்கு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். உறுதியான மற்றும் ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் அரசு எமது நாட்டில் உருவாக நாம் உருக்கமாக செபிப்போம். "தம் வருகைக்காக விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்கும் நீதியுள்ள நடுவர் நீதியின் வெற்றி வாகையைத் தருவர்" (2 திமொ 4:8) என்ற பவுலடியாரின் நம்பிக்கையோடு நம்மையும் இணைத்துக்கொள்வோம்.

**நமது மறைமாவட்டச் சூழ்நிலை**

பெரும்போக வேளாண்மைக்கான வேலைகள் நடைபெறுகின்ற இக்காலகட்டத்தில் சாதாரண விலைக்கு அரசாங்கம் வழங்கும் பசளைகள் விவசாயிகளுக்கு சிறிய ஆறுதலாக அமைந்திருக்கின்றது. தனியாரிடம் பெறக்கூடிய உரத்தின் விலை மிக அதிகமாக உள்ளது. இந்நிலையில் மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில், பெரும் பணச்செலவில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய இக்கட்டான நிலைக்கு நம் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத கனியவள மண் அகழ்வு. காற்றாலை போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தும் எமது கரிசனைக்குரிய விடயங்களாக உள்ளன. போதைவஸ்துப் பாவனை நமது பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பரவியுள்ள நிலைமை அதிர்ச்சிக்குரிய விடயமாகும். இத்தீமைகளுக்கு எதிராக அனைத்து இன, மத, சமூக மக்களோடும் இணைந்து நாம் கடுமையாகப் போராட அழைக்கப்படுகின்றோம். "உள்ளத்தில் உறுதியற்றோரே! திடன் கொள்ளுங்கள் அஞ்சாதிருங்கள் இதோ! நம் கடவுள் வருவார் நம்மை விடுவிப்பார் எனக் கூறுங்கள்" (எசா 35:4).

**நிறைவாக**

"வாக்கு மனிதர் ஆனார்: நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14) என்ற இறைவார்த்தை இந்த இக்கட்டான காலத்தில் நமக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருவதாக! உங்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களையும் இறை ஆசிரையும் தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கை நாட்டின் திருத்தூதரான் தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பரித்துரை நமக்குக் கிடைப்பதாக! நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை எப்போதும் நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக.இப்படிக்கு. கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,

**ஆயர் பிடெலிஸ் லயனல் இம்மானுவேல்**
**பெனாண்டோ மன்னார் மறைமாவட்ட ஆயர்**

## குருத்துவ வாழ்வின் பொன்விழா



யாழ். மறைமாவட்ட குருக்களான அருட்திரு ஜேக்கப் நீக்கிலஸ் அடிகளார், அருட்திரு தேவராஜன் அடிகளார், அருட்திரு எட்வின் சவுந்தரா அடிகளார் ஆகியோர் தமது குருத்துவ வாழ்வின் 50வது ஆண்டு பொன்விழாவினை 19ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை நினைவு கூர்ந்தார்கள்.

கொழும்புத்துறை பங்கில் பங்குத்தந்தையாக பணியாற்றிவரும் அருட்திரு ஜேக்கப் நீக்கிலஸ் அடிகளாரின் யூபிலி நிகழ்வு 19ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்திலும்,

பலாலி ஊறணிப் பங்கில் பங்குத்தந்தையாக பணியாற்றி வரும் அருட்திரு தேவராஜன் அடிகளாரின் யூபிலி நிகழ்வு 22ஆம் திகதி சனிக்கிழமை இளவாலை புனித அன்னாள் ஆலயத்திலும்

புன்னை நீராவியடி ஆங்கிலக் கல்வி வளாக இயக்குனர் அருட்திரு எட்வின் சவுந்தரா அடிகளாரின் யூபிலி நிகழ்வு 19ஆம் திகதி கடந்த செவ்வாய்கிழமை கனடா ரெறென்ரோ நகரில் நடைபெற்றது

## ஆயர் பேரவை...

முதலாம் பக்க தொடர்ச்சி......

அடையாளப்படுத்தி அவர்களில் பெத்லகேமில் பிறந்த குழந்தையை கண்டு கொள்வதை விட சிறந்த கிறிஸ்து பிறப்பு விழா எதுவுமில்லை. எனவே, ஆண்டவரின் வருகையை நம்மிடையே கொண்டாடத்தயாராகும் வேளையில், வறுமையில் வாடும் மற்றும் விரும்பி, உழைத்துச் சேமித்த பணத்தை வீணடித்து, இவ் நிகழ்வை வெறும் வெளிக் கொண்டாட்டங்களாக கொண்டாடுவதை தவிர்க்குமாறும், நமது இறை நம்பிக்கையாளர்களை வலியுறுத்துகிறோம். ஏழை எளியோருக்கு உலர் உணவுகள், குழந்தைகளுக்கு பால் உணவு மற்றும் மருந்து போன்றவற்றுக்கு உதவுவதற்காக இத்தகைய செலவுகள் அனைத்தும் ஒதுக்கப்பட வேண்டும். வெளிப்புற ஆடம்பரங்களில் புலன்களை செலுத்தாது கிறிஸ்து பிறப்பு விழாவின் ஆன்மீக செய்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

அமைதியின் அரசராகிய இயேசுவிடம் நம் தேசம் அமைதியுடன் வாழ மன்றாடுவோம். இக் கிறிஸ்து பிறப்பு விழாக் காலம் எம் நாட்டை குணப்படுத்தும் காலமாக இருக்கட்டும்! இக் கிறிஸ்து பிறப்பு நம் மண்ணின் ஏழைகளுக்கும், துன்பப்படும் மக்களுக்கும் ஆறுதல் அளிக்கட்டும்! ஏழைகளில் பாலன் இயேசுவைச் சந்திக்க எல்லா இதயங்களும் எழுச்சி பெறட்டும்!

மேதகு ஆயர் ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை குருநாகல் மறைமாவட்ட ஆயர், தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## வாழ்த்துகின்றோம்

அருட்பணி. ச. யேசுதாசன் J.P (அகில இலங்கை) கடந்த 25/11/2022 அன்று மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் மாண்புமிகு நீதிபதி ஏ.எஸ். ஹிபதுல்லா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். மன்னார், வஞ்சியன்குளம் பங்கை சேர்ந்த இவர் ஓர் கிளரேசியன் சபை துறவி ஆவார்.

இவர் தெனியாய, என்சல்வத்த, மருதமடு அன்னை ஆலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாகவும், தெ.மா/மாறை/என்சல்வத்த தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகவும், கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் உப செயலாளராகவும் பணிபுரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி திட்டமிடல் மகாநாடு 2022



மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி திட்டமிடல் மகாநாடு ஆய்வு 2022ஆம் ஆண்டு கூட்டொருங்கியக்க திருஅவை நோக்கி 14.11.2022 அன்று நாள் முழுவதும் மறைமாவட்ட குடும்ப பணியகத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பங்குத் தந்தையர்கள் துறவியர் பங்குப்பிரநிதிகள் மற்றும் பொதுநிலையினரான பங்கு மேய்ப்புப்பணி பிரதிநிதிகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான பல திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

## உறுதிபூசுதல் அருட்சாதன விழா



மடுறோட் பங்கின் புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில் 13.11.2022ம்திகதி ஞாயிற்றுகிழமை உறுதிப்பூசுதல் திருவருட் சாதனம் வழங்கும் சிறப்புத்திருப்பலி எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக் குரிய கலாநிதி. இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் இப்பங்கிற்குட்பட்ட 17 இளைஞர் யுவதிகள் இறைவனின் அருட் கொடையாம் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## 25வது யூபிலி ஆண்டு விழா





வவுனியா மகாறம்பைக்குளம் புனித மடுமாதா ஆலயம் தோன்றி 25 ஆண்டு யூபிலி விழாவினைக் கடந்த 05-11-2022 சனிக்கிழமை மாலை 4:30 மணியளவில் பங்கின் அனைத்து இறைமக்களும் ஒன்றிணைந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக் குரிய பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும், ஏனைய அருட்தந்தையர்களையும், அருட்சகோதரிகளை யும், பொலிஸ்மா அதிகாரிகளையும் இன்முகத்துடனே மகிழ்வோடு வரவேற்று விழாவைச் சிறப்பித்திருந்தார்கள்.

அத்தோடு ஆயர், பங்கு பணிமனை அடிக்கல் நாட்டும் நிகழ்வும், ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை பொது மண்டபம் திறப்பு விழாவும் ஆயர் தந்தை அவர்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆயர்தந்தையின் தலைமையில் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டதோடு திருப்பலி நிறைவில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன . தொடர்ந்து ஆயர்தந்தை, அருட்தந்தையர், மேலும் ஆலய வளர்ச்சிக்காக உழைத்தவர்கள் அனைவரையும் பாராட்டும் நிகழ்வும் நடை பெற்றன.

ஆலய யூபிலி விழாவினை ஒழுங்கமைத்த பங்குத்தந்தை அருட்பணி தேவராஜன் அடிகளாருக்கும், மற்றும் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## தேசிய மட்டத்தில் முதலிடம்



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் 2022.11.05 அன்று நடைபெற்ற தேசிய மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியின் பாவோதல் பிரிவு நான்கு நிகழ்ச்சியில் மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவி செல்வி அன்ரனிஸ் கம்சிகா முதலிடத்தை பெற்று, மன்னார் கல்வி வலயத்துக்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். மாணவிக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரை நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி கொன்சலிற்றா ஜெயக்குமார் அவர்களுக்கும் கல்லூரியின் அதிபர் திரு பாலபவான் அவர்களுக்கும் 'மன்னா' வாசகர்கள் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.


## துயர்பகிர்கின்றோம்

✝ அருட்பணி வரதன் குலாஸ் CMF அடிகளாரின் தந்தை அமரர் பிலிப்பு குலாஸ் 12.11.2022 அன்று இறைபதமடைந்தார். மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்கனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

✝ மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் அதிபர் அருட்பணி றெஜினோல்ட்FC அவர்களின் தந்தை அமரர் A. சந்தியாப்பிள்ளை அவர்கள் 15.11.2022 அன்று இறைபத மடைந்தார். மன்னார் மறைமாவட்டம் சார்பாக அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

✝ அருட்பணி தேவசீலன் CMF அடிகளாரின் தாய் அமரர் திரேசம்மா ஸ்ரீபன் அவர்கள் 25.10.2022 அன்று இறைபதமடைந்தார் மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கினறோம்.

## யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப்பேருரை நிகழ்வு



யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் பேரருட்திரு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் நினைவாக முன்னெடுக்கப்பட்டு வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப்பேருரை 27 ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டு அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த கர்தினால் பெஞ்சமின் தோமஸ் கூரே அவர்களின் மேய்ப்புப்பணி மற்றும் கல்விப்பணிசார்ந்த விடயங்கள் என்ற தலைப்பில் இவ்வருடத்திற்கான நினைவுப்பேருரையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் மற்றும் குருக்கள், துறவிகள் குருமட, பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மட்/ புனித சிசிலியா தேசிய கல்லூரி 100 வது ஆண்டு நிறைவு



மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையானது அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகளிடம் கையளிக்கப்பட்டு 100 வது ஆண்டு நிறைவு விழாவினை 29.10.2022 அன்று கொண்டாடினர்.

## கரோல் மற்றும் வில்லுப்பாட்டு போட்டி

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியி னால் ஆண்டு தோறும் நடாத்தப்படுகின்ற கரோல் பாடல் போட்டி மற்றும் வில்லுப்பாட்டுப் போட்டிகளானது இவ் வருடம் மடு, மன்னார், முருங்கன் ஆகிய மறைக்கோட்ட பங்குகள் உள்ளடங்கலாக 26.11.2022 சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு மன்னார் கலையருவி மண்டபத்திலும் வவுனியா மறைக்கோட்ட பங்குகளை உள்ளடக்கியதாக வவுனியா வேப்பங்குளம் பங்கின் புனித சூசையப்பர் ஆலயத்தில் 27.11.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் நடைபெற்றது. வவு/மறைக்கோட்ட மட்டத்திலான போட்டிகளின் போது பிரதம விருந்தினராக அன்புக்கும் பெருமதிப்புக்குரிய அருட்பணி P.கிறிஸ்துநாயகம் அடிகளாரும் (குருமுதல்வர் மன்னார் மறைமாவட்டம்), கௌரவ விருந்தினர்களாக அருட்பணி ம. செல்வநாதன் பீரிஸ் அடிகளார் (இயக்குநர் கலையருவி), அருட்பணி கமலநாதன் அடிகளார் OMI (இல்ல மேலாளர் அமதி அகம்) மற்றும் திருமதி. றோமலதா யூட் நேசராஜா (ஆசிரிய ஆலோசகர்- கிறிஸ்தவம் வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக அருட்பணி. அருண்தாஸ் குரூஸ் (உதவி இயக்குனர் வாழ்வுதயம்), அருட்சகோதரி மாகிறட் (இல்ல மேலாளர் திருச்சிலுவை கன்னியர் மடம்), அருட்சகோதரி. A. பற்றிமா (இல்ல மேலாளர்வைகறை) மற்றும் அருட்சகோதரி குளோறியா (அதிபர் கனறா முன்பள்ளி) கலந்து சிறப்பித்திருந்தனர். இப்போட்டியானது இரு மறைக்கோட்டங்களிலும் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற்றது. இதில் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பங்குகள் ஆர்வத்துடன் பங்குபற்றினா ர்கள். மன்னாரில் நடுவர்களாக செல்வி. சாந்தா கிறிஸ்ரின் ISA வவுனியா தெற்கு, திருமதி ஞானம்மா ஆசிரியர், அருட்சகோதரி மரியகொறற்றி (அன்புக்கன்னியர்) பணியாற்றி னார்கள். வவுனியா மறைக் கோட்ட மட்டத்தி லான போட்டிகளின் போது நடுவர்களாக, ஆளைள. சாந்தா கிறிஸ்ரின் ISA வவுனியா தெற்கு, திருமதி ரூபன் அன்ரனற் றொஷானி ஆசிரியர் செட்டிகுளம் மகாவித்தியாலயம், செல்வி C. B ஜெயசீலி ஆசிரியர் வவுனியா தமிழ் மத்திய ம.வி கலந்து சிறப்பித்தனர்

## கரோல், வில்லுப்பாட்டு இறுதி முடிவுகள்

மன்னார், மடு, முருங்கன் ஆகிய மறைக்கோட்டம் கரோல்பாடல்

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - ஜோசப்வாஸ் நகர் பங்கு
இரண்டாம் இடம் - பேசாலை பங்கு
மூன்றாம் இடம் - பள்ளிமுனை பங்கு
நான்காம் இடம் - கற்கிடந்தகுளம் பங்கு
ஐந்தாம் இடம் - பேராலய பங்கு, வங்காலை பங்கு

சிறந்த இசையமைப்பு - ஜோசப்வாஸ் நகர் பங்கு
சிறந்த பாடல் வரிகள் - கற்கிடந்தகுளம் பங்கு

**மேற்பிரிவு**

முதலாம் இடம் - தோட்டவெளி பங்கு
இரண்டாம் இடம் - பள்ளிமுனை பங்கு
மூன்றாம் இடம் - பேசாலை பங்கு
நான்காம் இடம் - கட்டைக்காடு பங்கு
ஐந்தாம் இடம் - பண்டிவிரிச்சான் பங்கு
ஆறாம் இடம் - கற்கிடந்தகுளம் பங்கு

சிறந்த இசையமைப்பு - தோட்டவெளி பங்கு
சிறந்த பாடல் வரிகள் - பேசாலை பங்கு

(7ம் பக்கம்....)

## துயர் பகிர்கின்றோம்



Rev. சீனியர் மேரி ரூபினா சாமிநாதர் யாழ் மண்ணில் 01.03.1937ல் பிறந்தது 18.12.1965 இறைபணியில் இணைந்து 13.11.2022 அன்று இறைபதம் அடைந்தார். இறுதிச் சடங்குகள் கடந்த செவ்வாய்கிழமை (15.11.2022) காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ்சையூரில் உள்ள கன்னியர் இல்லத்தில் நடைபெற்றது இவரது ஆன்மா அமைதியில் இருக்கட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு மாதம்

## கார்த்திகை

### மரண பயத்தை நீக்குவோம் நித்திய வாழ்விற்கு தயாராவோம்

கிறிஸ்தவ மறையின்படி மரணம் பாவத்தின் விளைவு ஆகும். "நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை" (தொடக்க நூல் 3:19) என்று இறைவன் பாவத்தில் வீழ்ந்து போன ஆதாமுக்கு, "பாவமே சாவின் கொடுக்கு" (1கொரிந்தியர் 15:56) என்று புனித பவுல் கொரிந்தியசபைக்கு உரைப்பதனையும் காண முடிகிறது. பிறந்தவர் அனைவரும் இறப்பது என்பது உலகின் நியதி. என்றாலும் பாவத்தின் சம்பளமாகிய மரணம் எப்போது சந்திக்கும் என்று தெரியாது. பிறந்து ஒரு சில நிமிடங்களும், சிலருக்கு சில வருடங்களும், பலருக்கு பல வருடங்களும், சிலருக்கு நீண்ட ஒரு நூற்றாண்டாகவும், சில உயிருக்கு கருவறை கல்லறையாகவும் இருக்கின்றது. எனினும் கடவுளின் சித்தப்படி எந்த வயதினருக்கும் எந்தக் கணப்பொழுதிலும் மரணம் ஏற்படலாம்.

பிறப்பு-வாழ்வு-இறப்பு இவை மனித வாழ்வில் நிச்சயிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டங்களாகும். இதன் இறுதிக்கட்டமான இறப்பு அனைவருக்கும் தீவிர பயத்தையும், அருமையானவர்களை விட்டு பிரிந்து போய்விடுவோம் என்ற துயரத்தையும், இறப்பிற்குப் பின் என்ன சம்பவிக்கும் என்ற அச்சத்தையும், சேர்த்து வைத்த சொத்துக்களை சுகங்களை உறவுகளை எப்படி விட்டு செல்வது என்ற கலக்கத்தையும் எம்மில் அநேகருக்கு ஏற்படுத்துகின்றது.

மரணம்! இயற்கை அழிவுகள், கொலை, பஞ்சம், விபத்து, தற்கொலை, போர், அடிப்படைத்தேவைகள் இன்மை, முதுமை, நோய் போன்றவற்றினாலும் ஏற்படுகின்றது. இவற்றில் மரணப்படுக்கையில் இருக்கும் முதியோரும் இந்த இறுதி நேரத்தில் அமைதியற்று, தீவிர மரண பயத்துடனும், அங்கலாய்ப்புடனும், படபடப்புடனும் அவஸ்தைப்படுவார்கள். இந்த நேரத்தில் இறப்பைப் பற்றி எழும் ஐயப்பாடுகளை நீக்கி, கிறிஸ்தவ மறையின் படி மரணத்தின் பின் இருக்கின்ற நித்திய வாழ்வு பற்றி உரையாடி, அவர்களை ஆற்றுப்படுத்தி அருகில் இருப்போர் துணைபுரிய வேண்டும். இவ்வாறு துணைபுரிபவர் முதலில் தனக்குள்ளே இருக்கிற மரண பயத்தைப்பற்றிய ஐயப்பாடுகள் அச்சங்கள் பிழையான கருத்துக்கள் முதலியவற்றைப் போக்க வேண்டும். நாம் எமது அறிவின்மையால் மரணத்தைப்பற்றி கதைக்க நிலை தடுமாறும் பொழுது அது இறப்பவரையும் இறப்புக்காக காத்திருக்கும் உறவுகளை மேலும் கலக்கமுற செய்யும். இவர்களை என்னென்ன முறையில் சாந்திப்படுத்தலாம் அல்லது ஆற்றுப்படுத்தலாம் என்று பார்ப்போம்.இறக்கப்போகும் தருவாயில் ஒருவர் தனது உறவினர்கள் நண்பர்கள் ஏனையவர்களிடம் இருந்து விடைபெற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கொன்றழிக்கும் கொள்ளை நோயிலினின்றும் தப்புவிப்பார் (திருபா 91:3) "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28) "இறுதிவரை வழி நடத்துவார்"(திருபா 48:14) போன்ற ஆறுதல் தரும் விவிலிய வார்த்தைகளையும் வேறு பல விவிலிய வாசகங்களையும் அடிக்கடி உரைப்பதன் மூலம் அவர்களின் பயத்தைப் நீக்கி இறைபணிக்குள் அவர்களை ஐக்கியப்படுத்த வேண்டும். மேலும் மரணப்படுக்கையில் இருப்பவர்களின் சூழல் அமைதியாகவும், சுத்தமாகவும், நல்ல நறுமணங்கள் கமழும் இடமாகவும், இதமூட்டும் அழகுச்சூழலாகவும் இருத்தல் நன்று. உறவினர்கள் சூழ நின்றால் நன்றாக இருக்கும். மடியில் வைத்து தொடுகை உணர்வுகள் மூலம் அன்பைப்பகிர்தல் அவர்களை அமைதிப்படுத்தல் போன்ற செயல்களினால் இறப்பவர்கள் எந்த விதமான பயமும் இன்றி ஆறுதலாகவும் தமது இறுதி மூச்சை விடுவார்கள். எமக்கும் நன்றாக பார்த்துக்கொண்டோம் என்ற மன ஆறுதலும் இறந்தவர்களை குறித்து எந்தவிதமான குற்ற உணர்வு அற்றவர்களாகவும் இருப்போம். நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதனின் கையால் கட்டப்படாதது நிலையானது (2கொரி5:1) அங்கு அழுகையில்லை துன்பமில்லை ஆனந்தப்பெருக்கு நிலைத்திருக்கும் அத்தகைய வாழ்வு எம்மவருக்கு எப்போது வரும். எனவே! நாம் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். "பரலோக தந்தையே இறைவா உமதுகரங்களில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்." என்று யூதர்கள் இரவில் படுக்கு முன்பு செபிப்பது போல நாமும் செபிப்போம் மரணபயத்தை நீக்குவோம் நித்திய வாழ்வுக்கு தயாராகுவோம்.

அ.ஜெ.நோயல் டானியல்
காத்தாங்குளம்

## பாடகர் குழாமின் பாதுகாவலி புனித சிசிலியா

### நவ.22

கிறிஸ்துவின் வீரர்களே! "எழுவீர் இரவுக்கு உரிய செயல்களை விட்டுவிடுங்கள். ஒளியின் போராயுதத்தை அணிந்து கொள்ளுங்கள்" என்று வீரமுழக்கம் செய்தவர். இவர் உரோமையில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தவர். சிறுவயது முதலே இறையன்பில் தன்னைக் கரைத்துக்கொண்டார். செபம் செய்வதில் ஆனந்தம் அடைந்தார். எந்நாளும் இயேசுவின் திருவுளப்படி வாழ்ந்து, அவரது நாமத்தை அறிக்கையிட்டுத் தூயவராக வாழ்ந்தார்.

புனித செசிலியா, இறைவனை மாட்சிமைப் படுத்துவதை இலட்சியமாகக் கொண்டார். தனது கன்னிமையை இறைவனுக்கு அர்ப்பணமாக்கி வாழ்ந்தார். இசைகளின் வாயிலாக இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார். வாழ்வு தருகின்ற, நலமளிக்கின்ற, ஞானத்தைத் தரக்கூடிய விவிலியத்தை எங்கு சென்றாலும் தம் கரங்களில் ஏந்திச்சென்றார்.

உலகின் ஒளியாகிய கிறிஸ்துவோடு ஒன்றாக இணைந்துவிட்டேன். அவரே என் கண்களுக்க புனித செசீலியா உரோமை நகரிலே அலெக்ஸாண்டர் செவேருஸ் (Alexander Severus) ஆட்சி புரிந்த காலத்தில் கத்தொலிக்க கிறிஸ்தவத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளான வேதகலாபனையின் காலத்தில் கி.பி.200-ல் உரோமில் ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே இனிமையாக பாடும் திறமை பெற்றிருந்தார். இறைவனுடைய அன்பிற்காக தன்னையே முழுவதும் அர்ப்பணித்து வாழ்ந்தாள். தன்னுடைய கன்னிமையை இயேசுவுக்காக கையளித்தார். ஆனால் அவர் பெற்றோர் ஏற்கவில்லை. வல்லேரியன் எனும் கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவர் இவரை அதிகம் விரும்பியதால் பெற்றோரால் மணம் முடித்துக் கொடுக்கப்பட்டார்

ஆனால் திருமணத்திற்குப் பிறகும் தனது தீர்மானத்தில் உறுதியாய் இருந்தார். இவரது மன உறுதியையும் திட நம்பிக்கையையும் கண்ட அவரது கணவர், அவரது கன்னிமையை மதித்தார். அவரைத் தொடர்ந்து நேசித்தார். திருமணத்தில் இசைத்துப் பாடப்பட்ட பாடலிலே தன் விண்ணகத் தந்தைக்கு தன்னையே அர்ப்பணித்து, தன் நம்பிக்கையை உறுதி செய்தார் புனித செசிலியா. அவரது இசையின் நாட்டம் அவரைப் பாடகர்களின் பாதுகாவலியாகக் கொள்ளச் செய்துள்ளது.

திருமணம் முடிந்த அன்று தன் கணவனை நோக்கி "கடவுளின் தூதர் ஒருவர் என் கற்புக்குக் காவலராய் இருக்கின்றார் . எதையும் செய்ய நீர் முயற்சிக்கலாகாது " என்றார். வலேரியன் அவரைப் பார்த்து , "கடவுளின் அந்தத் தூதரை நான் பார்த்தால் இயேசு கிறிஸ்துவை விசுவசிப்பேன் என்றார். அப்போது செசீலியா, திருமுழுக்கு பெற்றால் ஒழிய அவரைப் பார்க்க முடியாது" என்றார். சுரங்கங்களில் வாழ்ந்த உர்பன் என்னும் திருத்தந்தையிடம் சென்று வலேரியன் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்.



வீட்டிற்குத் திரும்பிய வலேரியன் தன் மனைவியின் அருகில் ஓர் அழகிய வானதூதர் நிற்பதைக் கண்டார். அவர் கையில் ஒரு ரோசா மலையும் ஒரு லீலி மலையும் வைத்திருந்தார் . பிறகு, வானதூதர் அதை இருவருக்கும் அணிவித்து, இவை வாடா மாலைகள் இவற்றைப் பிறர் காண இயலாது நீங்கள் புனித வாழ்வு வாழ இது உங்களை அறிவுறுத்தும். என மொழிந்து வலேரியனிடம், "நீ விரும்பும் வரம் ஒன்று கேள்" என்றார் அவர், "எனக்கு ஒரு சகோதரன் உள்ளான். அவன் பெயர் திபுர்சியஸ், அவனும் என்னைப்போல் கிறிஸ்தவனாக வேண்டும் இதுவே நான் கேட்கும் வரம்" என்றார். "அவ்வாறே ஆகுக" ! இருவரும் வேதசாட்சி முடிபெற்று சான்று பகர்ந்து இறப்பீர்கள்" என உரைத்து மறைந்தார். அவ்வாறே, திபுர்சியசும் மனம்மாறி திருமுழுக்கு பெற்றபின் தேவதூதரைக்கண்டான்.

உரோமின் அதிகாரி அல்மாகுஸ் என்பவர் இவர்கள் இருவரையும் கைது செய்யும் நாள்வரை வலேரியனும், திபுர்சியுசும் மிக நல்ல பணிகளைச் செய்துவந்தனர். உரோமின்அதிகாரி அல்மாகுஸ் செசிலியா, வலேரியன், திபுர்சியுஸ் ஆகியோரைக் கைது செய்து அழைத்து வந்தான் "நம் கடவுள் ஜுபிடருக்கு தூபம் காட்டி வழிபட்டால் பிழைப்பீர்கள். இல்லையேல் கொல்லப்படுவீர்கள்." என்று எச்சரித்தான். ஜுபிடர் சிலைக்கு முன் இவர்களை அனுப்பினான். மாக்சிமுஸ் என்ற அதிகாரி இவர்கள் மீது பரிவு கொண்டு இவர்களைத் தம் இல்லம் அழைத்துச் சென்று உபசரித்தான். இவர்களின் சாட்சியத்தைக் கேட்டு அவனும் அவன் வீட்டாரும் கிறிஸ்தவர்களாயினர் .மூன்றுபேரும் வேதசாட்சிகளாக மாறி புனிதர் நிலைக்கு உயர்த்தப் பட்டனர்.

உரோமன் கடவுளுக்கு பலியிட வந்த மக்களை செசீலியா மனந்திருப்பினாள். அவரைக் காணவந்த திருத்தந்தை உர்பன் அவர் இருந்த இடத்தில் நானூறு பேருக்கு அதிகமான பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். செசீலியா கோர்ட்டுக்கு வந்தபோது அல்மாகுஸ் மீண்டும் அவளை மறுதலிக்கச் செய்ய பலமுறை முயன்றான். அசைக்க முடியாத அவளது நம்பிக்கையைக் கண்டு மூச்சுமுட்டி சாகச் செய்ய தீர்ப்பு வழங்கப் பட்டது. ஒரு அறையில் நெருப்பு மூட்டச்செய்து மிகவும் அதிகமான நெருப்பு வைத்த பிறகும் செசீலியா சாகவேயில்லை. இறுதியாக இவரது தலை வெட்டப்பட உத்தரவு இடப்பட்டபோது, மூன்று முறை வெட்டப்பட்ட நிலையிலும் மூன்று நாள் உயிர் பிரியவில்லை. அந்த வேதனையின் மத்தியிலும் இறைவனைப் பாடி புகழ்ந்த வண்ணம் வாழ்ந்து அதன் பின்னரே இறைவனடி சேர்ந்தார்.

ஜெபம் : அர்ச். செசீலியம் மாலை உங்களுக்குக் கொடுக்கப் பட்டதைப் போல் எங்களுக்கும் கடவுள் ஒரு காவல் தூதரைக் கொடுத்துள்ளார். நாங்கள் பாவங்கள் செய்ய நினைக்கும் போது எங்கள் அருகில் இருக்கும் காவல் தூதரிடம் வேண்டி அந்த பாவத்திலிருந்து எங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் வரம் தாரும். நாங்கள் தினமும் காவல் சம்மனசானவர் ஜெபம், மிக்கேல் அதிதூதர் ஜெபம், மனவல்ய ஜெபங்களையும் ஜெபிக்க வரம் தாரும். முக்கியமாக நம் நேசர் இயேசுவுக்காய் எல்லாத் துன்பங்களையும் கொடிய சாவையும் ஏற்று இறுதிவரை விசுவாசத்தில் உறுதியார் இருந்ததுபோல் நாங்களும் கடைசிவரை விசுவாசத்தில் உறுதியாய் இருக்க வரம் பெற்றுத்தாரும் ஆமென்.

புனித செசிலியம்மாளே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !!!

இயேசுவுக்கே புகழ் ! மரியாயே வாழ்க !

## கருணை வடிவான தாய்



அன்பான தெரசா அன்னையே..!
கருணை என்றாலே ...உலகம்
சொல்லும் உன்னையே...
அகிலம் போற்றும் உன்னத தாயே..!
சேவையின் உருவான அன்னையே..!
போற்றுவோம் தினமும் உன்னையே..!
அல்பேனியாவில் நீ பிறந்தாய்..!
இந்தியாவில் சேவை செய்தாய்..!
சேரிகளின் உள்ளே நுழைந்தாய்..!
அம்மக்களுக்கென்றே நீ உழைத்தாய்..!
யாரும் அனாதைகளில்லை என்றாய்..!
யாவர்க்கும் அடைக்கலம் தந்தாய்..!
தொண்டுக்கே தொண்டென வாழ்ந்தாய்..!
தொழுநோயாளிகளைக் கூட காத்தாய்..!
வாழும் ஏழைகள் வாழ வழிவகுத்தாய்..!
பாரில் அவர்கள் ஏற்றம் பெற கல்வி தந்தாய்..!
எளிமைக்கே இலக்கணமாய் வாழ்ந்தாய்..!
சேவைக்கு என்றென்றும் நீதான் தாய்..!
கருணை இல்லத்தை நீ படைத்தாய்..!
கைவிடப்பட்டோரை வாழ வைத்தாய்..!
கன்னியாய் இருப்பினும் நீதான் தாய்..!
என்றென்றும் எங்களுடன் வாழ்கின்ற தாய்..!

இறைவார்த்தையை தான் வாழ
தன் குடும்பங்கள் வாழ..
தாறுமாறாக போதித்து சுகபோகமாய்
வாழும் போலி இறை ஊழியர்கள்
மத்தியில்...தன்னை அழித்து, இறைஅன்பினை
(கருணையால்)செயலால் காட்டி
ஏழைகளை சிரிக்கச்செய்து
இயேசுவை மகிழச்செய்த அன்னையே!
எங்களை எல்லாம் விட்டு ஏன்சென்றாய்....
கருணைவடிவான தாயே...

## நாமும் நமது சேமக்காலையும்

நமது உறவுகள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சேமக்காலைகளை கண்ணியமாகப் பராமரிக்க வேண்டியது எமது எமது கடமையாகும். நமக்காக காலமெல்லாம் உழைத்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை தரிசித்து. அவர்களை நினைவுகூர்ந்து செபிக்கும் போது அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்கு உதவுவதோடு நமக்கும் மன அமைதி கிடைக்கிறது.

ஒரு சில இடங்களில் சேமக்காலைகள் சரிவர பராமரிக்கப்பட்ட போதிலும் பெரும்பாலான சேமக்காலைகள் முறையாகக் கவனிக்கப்படுவதில்லை. கால் நடைகளின் மேய்ச்சல் நிலமாக சேமக்காலைகள் காணப்படுவது மிகவும் வருத்தத்திற்கு உரிய விடயம் இதைவிடவும் கேவலமான காரியங்களிற்கும் சேமக்காலைகளைப் பயன்படுத்துவது எழுத முடியாத துயரம். இறந்த பிறகு கல்லறைகள் கட்டி என்ன பயன்? என்று பேசுபவர்கள் ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் வேறுபாடு கட்டாயம் இருந்தாக வேண்டும்.

" சமரசம் உலாவும் இடம் " என்று சேமக்காலைகள் சொல்லப்பட்ட போதிலும் அங்கும் சமநிலை நிலவுவதில்லை. வசதி படைத்தவர்கள் கூடுதலான நிலத்தில் கல்லறைகள் அமைக்கிறார்கள். நம்முடைய வசதிகளைக் காட்ட கல்லறைகள் அமைக்க வேண்டியதில்லை. ஒரு நினைவிடம் போதும். தூரநோக்கோடு பார்க்கும் போது இடப்பற்றாக்குறை எமக்கும் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு. அதனால் இவைகளும் கண்காணிக்கப்பட வேண்டும்.

சேமக்காலை கல்லறையில் உள்ள பொருட்களைக் கூட களவாடும் இச்சை செயலை என்னவென்று சொல்வது? இப்படிப்பட்டவர்களை கடவுள்தான் பொறுப்பெடுக்க வேண்டும்.

சேமக்காலைகளின் பராமரிப்பில் விடுதலைப்புலிகள் சிறந்த முன்னுதாரணமாக இருந்தார்கள்.

இறந்தவர்களுக்காக நாம் செய்யும் மேலான காரியம் அவர்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியாகும். கார்த்திகை 02 இல் சேமக்காலையில் திருப்பலி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அன்று காலையில் தான் வந்து புதைகுழிகளைத் துப்பரவு செய்து கொண்டிருப்பார்கள். முந்திய நாட்களில் இவ் வேலைகளைச் செய்து, ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் முழுமையாக இணைந்து கொள்ள வேண்டும்.

ஜெயா பாலாஜி
முருங்கன்.

அரச நிறுவனங்களும், ஆலய நிர்வாகமும் சேமக்காலைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளல் தொடர்பான பயிற்சிநெறி



இம்மாதம் மேற்படி திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டதொழில் முயற்சியாளர் களிற்கான பயற்சிநெறியானது கறிற்ராஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி செ.அன்ரன் அடிகளாரின் ஆலோசனையின் பிரகாரம் வாழ்வுதயத்தின் கேட்போர் கூடத் தில் நடைபெற்றது. இப்பயிற்சியின் வளவாளராக திரு S.A.சியாம்சிங் சொய்சா அவர்கள் செயற்பட்டார். இதில் 7 விதை உற்பத்தியாளர் களும் 6 சேதனப் பசளை தயாரிப்பாளர்களும் பங்குபற்றி பயன் அடைந்தனர். இப்பயிற்சியின் மையப்பொருளாக எமது நாட்டில் புரையோடிப்போயுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து எவ்வாறு எம்மை மீட்டு எமது அன்றாட வாழ்வாதார முயற்சிகளை மிகவும் துல்லியமாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலாம், என்பது தொடர்பாகவும், பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் அவர்கள் மத்தியில் சிறு போட்டி நிகழ்வுகளையும் நடாத்தினார். இந்நிகழ்வுகளில் பங்கேற்றோர் மிகவும் உற்சாகமாக பங்கெடுத்தனர். இதில் ஒருவர் சந்தைப்படுத்தல் போட்டி நிகழ்வில் முதலாம் இடத்தினை தட்டிக் கொண்டார். மிகவும் பயனுள்ளதாக இருந்தது என பங்கெடுத்த தொழில் முயற்சியாளர்கள் பயிற்சியின் இறுதியில் நடைபெற்ற மீளாய்வில் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத் தக்கது.

திட்ட இணைப்பாளர் (IHD)
சு.அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)

## பாரம்பரிய விதை உற்பத்தி தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு

விழிப்புணர்வு கருத்தமர்வானது வாழ்வுதய மண்டபத்தில் நடை பெற்றது. இதற்கு வளவாளராக உயிலங்குளம் விவசாய பண்ணையின் போதனாசிரியர் அவர்கள் கலந்து கொண்டு மேற்படி விடயம் தொடர்பாக சிறந்த விழிப் புணர்வினை வழங்கினார். இதில் இலக்கு கிராமங்களினை சேர்ந்த 15 விதை உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். கடந்த காலங்களில் எமது பிரதேசங்களில் படிப்படியாக பாரம்பரிய விதை உற்பத்திகள் படிப்படியாக குறைந்து போவதினை நாம் காண்கின்றோம், எனவே தான். இவ்வாறான பாரம் பரிய விதை உற்பத்தி களை ஊக்குவிப்பதற்காக வாழ்வுதயத்தின் மேற்படி சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவினரால் இவ்வாறான விழிப்புணர்வுகளை அரச மட்ட விவசாய பண்ணைகளின் போதனாசிரியர்களைக்கொண்டு இத்திட்டத்தின் இலக்கு கிராம பயனாளிகளிற்கு வழங்கப்பட்டு வருகின்றது

Caritas SRI LANKA – SEDEC | MISEREOR IHR HILFSWERK | Caritas Valvuthayam

இலங்கையின் இயற்கை சூழலை பாதுகாப்பதற்கான படிக்கல்



## வேப்பங்குளம் கிராமத்தில் மரநடுகை நிகழ்வு

அண்மையில் கறிற்ராஸ்-வாழ்வுதயத்தின் இலக்கு கிராமங்களில் மரநடுகை நிகழ்வு கற்றராஸ்-வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்பணி செ.அன்ரன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இவ் மரநடுகை நிகழ்வுகளில் வேப்பங்குளம் கிராமத்தில் நடைபெற்றபொழுது அக்கிராமத்தினை சேர்ந்த இஸ்லாம் மதத்தலைவர்கள், இளைஞர் யுவதிகள், கிராம பெரியார்கள் போன்றோருடன் இணைந்து கறிற்ராஸ் இலங்கை SEDEC இன் தேசிய முகமையாளர் திரு சஜித்சில்வா அவர்களுடன் தேசிய நிலையத்தின் பிராந்திய மட்ட அலுவலர் களும், வாழ்வுதயத்தின் திட்டப்பணியாளர் களும் கலந்துகொண்டனர். இச்செயற்பாட்டின் ஊடாக மக்கள் தமது இயற்கை வளத்தினை பாதுகாத்தல் போன்ற விழிப்புணர்வுகளை பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சூழல் பாதுகாப்பு குழுவினருக்கான மாதாந்த ஒன்றுகூடல்

மேற்படி திட்டத்தின் கீழ் உள்ள இலக்கு கிராம பயனாளிகளிற்கான மாதாந்த ஒன்றுகூடலானது ஒவ்வொரு மாதமும் இலக்கு கிராமங்களில் நடைபெற்று வருகின்றது இவ் ஒன்றுகூடல்களை இடைவிடாது நடாத்துவதினால் இத்திட்டத்திற்குள் உள்ளடங்கும் செயற்பாடுகளை இலகுவாக நடைமுறைப்படுத்த உதவியாகவுள்ளது. அத்தோடு இவ் ஒன்றுகூடல்களில் மாதாந்த உத்தேச செயற்றிட்டம் போடப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துகின்றார்கள். மேலும் பொதுச் சிரமதானங்களை கிராம மட்டத்தில் மேற்கொண்டு இயற்கை சூழலை சுத்தமாக பேணுவதோடு சுகாதார பிரிவினரோடு இணைந்து நுளம்பின் தாக்கங்களை கட்டுப்படுத்தி வருகின்றாகள். இக்குழுவால் மக்கள் இவ்வாறாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயல்பாடுகளில் ஈடுபடுவதினால் அக்கிராமத்தினை சேர்ந்த ஏனைய மக்களும் விழிப்புணர்வு பெற்று வருகின்றார்கள். இதனால் அக்கிராமத்திலுள்ள சிறுவர்கள் எதிர்காலத்தில் தமது சூழலினை பாதுகாப்பதில் கருத்தாய் செயற்படுவதற்கும் இவ்வாறான விழிப்புணர்வுகள் பேருதவியாக அமைகின்றது.

## பாடசாலை மாணவர்களிற்கான வலுவூட்டல்



மன்/கட்டையடம்பன் பாடசாலை மாணவர்களிற்கு கற்றிராஸ்-வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் விழிப்பூட்டல் கருத்தமர்வு நடாத்தப்பட்டது இதற்கு வளவாளராக "முல்லா" அமைப்பினைச்சேர்ந்த திரு தேவகிருஷ்ணன் அவர்கள் வளவாளராக செயற்பட்டார். மையைப் பொருளாக தற்கால பொருளாதாதர நெருக்கடியிலிருந்து எவ்வாறு எம்மை பாதுகாக்கலாம் என்பதன் கருத்தியலோடு வலுவூட்டல் நடாத்தப்பட்டது. மாணவர்கள் தமது கல்வி வாழ்வில் ஓய்வு நேரங்களில் பாடசாலை வளாகங்களிலும், வீடுகளிலும், இயற்கை வளத்தினை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றியும், இயற்கை பசளைகளைக் கொண்டு வீட்டு தோட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்கான விழிப்பூட்டல் வழங்கப்பட்டது. மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் பங்கெடுத் தனர். 30 மாணவர்கள் வரையில் இக்கருத்த மர்வில் பங்குபற்றினர்

# சமய நல்லிணக்கத் திட்டத்தின் முக்கிய செயற்பாடுகள்

கறிராஸ் வாழ்வுதயம் கடந்த பல ஆண்டுகளாக சமய நல்லிணக்கத் திட்டத்தினை மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்திவருகின்றது. சமய முரண்பாடுகள் பலகோணங்களில் தூண்டப்பட்டாலும் இந்தச் சமய நல்லிணக்கத் திட்டமானது அந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காணவும், சமய ஒற்றுமையை வளர்க்கவும் பல திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. அரசியல் நோக்கங்களைப் பின்புலமாகக் கொண்டு அசௌகரியங்கள் உருவாக்கப்பட்டாலும் சாதாரண மக்களை தெளிவூட்டி சமாதானப் படுத்துவதில் இத்திட்டம் பாரிய பங்களிப்புச் செய்கின்றது.

Norad | Caritas Norge

## சமய நல்லிணக்க குழுக்கள் உருவாக்கம்



தெரிவு செய்யப்பட்ட இலக்கு கிராமங்களில் (அளவக்கை, செம்மண்தீவு, அடம்பன், ஆண்டான்குளம், வட்டக்கண்டல்) இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் சமயங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றுதிரட்டி அரச அதிகாரிகளின் உதவியுடன் கிராம மட்ட சமய நல்லிணக்க குழுக்கள், சிறுவர் குழுக்கள், இளையோர் குழுக்கள், மாவட்ட மட்ட ஆலோசனைக் குழு என பல பயனுள்ள செயற் பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன, விசேடமாக, சமய நல்லிணக்க குழுக்களின் சிறப்பான செயற்பாடுகள் பல சமூகமட்ட அமைப்புகளுக்கு சவாலான எடுத்துக் காட்டாகும். மாதாந்தக் கூட்டம் நடாத்துதல், அங்கத்தவர்களுக்கு பயனுள்ள கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், மாலை நேர வகுப்புகளை மேற் பார்வை செய்தல், சமய விழாக்களை முன்னின்று நடாத்துதல், பொது நிகழ்வுகளுக்கு தலைமைதாங்குதல், நோயாளர்களைப் பார்வையிடுதல், சமய ஸ்தலங்களைத் தரிசித்தல், சமயங்களுக்கு இடையில் பகிர்வு, உறுப்பினர் கள் அல்லது உறுப்பினர்களின் உறவுகள் இறந்தால் சமைத்த உணவு வழங்குதல், நோயாளர்களைப் பார்வையிடுதல் என்பனவாகும். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எனும் இன, மத வேறுபாடுகளின்றி சிறுவர்களும், இளையோரும், பெரியோரும் ஒரே குடும்பமாக, உறவுகளாக, நண்பர்களாக இணைந் திருப்பது சமய நல்லிணக்கத்தின் ஆரோக்கியமான அறி குறியாகும்.

## மாவட்டமட்ட சமய நல்லிணக்க ஆலோசனைக்குழு



இஸ்லாமிய மௌளவிகள், பௌத்த பிக்குகள், கிறிஸ்தவ அருட்தந்தையர்கள், இந்துக்குருக்கள் என நான்கு சமயத் தலைவர்கள் உட்பட இலக்குக்கிராம அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், கிராமமட்ட சமய நல்லிணக்கக்குழுக்களின் பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கின்றார்கள். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒன்று கூடும் இவர்களின் கூட்டத்தில் சமூகப்பிரச்சனை கள், சமய முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் கிராமியச்செயற்பாடுகள், சமய நல்லிணக்கத்திற்கான ஆலோசனைகள் என்பன கலந்துரையாடப்படும். செயற்பாடுகள், சமய நல்லிணக்கத் திற்கான ஆலோசனைகள் என்பன கலந்துரையாடப்படும். இரு சமய மக்களுக்கு இடையிலான காணிப் பிரச்சனைகள், அல்லது வேறு முரண் பாடுகள் என்றால் இந்த ஆலோசனைக் குழு அவர்களைச் சந்தித்து பிரச்சனை களுக்கான தீர்வுகளை, [illegible] முடிவுகளை வழங்கும்.

## சமய விழாக் கொண்டாட்டங்கள்

ஒளிவிழா, றம்ழான், தீபாவளி, தமிழ்-சிங்களப் புத்தாண்டு முதலான சமயம்சார் பொதுவிழாக் கொண்டாட்டங்கள் முன்னெடுக் கப்படுவதன் சிறப்பு யாதெனில் தீபாவளி ஆயத்தங்களில் கிறிஸ்தவர்கள், இஸ்லா மியர்கள் ஈடுபடுவதும், றம்ழான் கொண்டாட் டத்தில் இந்துக்களும், கிறிஸ்த வர்களும் தலைமைதாங்குவதும், ஒளிவிழா நிகழ்வுக ளை இந்துக்கள், இஸ்லாமியர்கள் முன்நின்று நடாத்துவதும் ஒற்றுமை, சகோதரத்துவம், சமாதானம் என்பவற்றின் வெளிப்பாடாக்க கொள்ள முடியும். றம்ழான் கொண்டாட்டத்தின்போது கிறிஸ்தவர்களும், இந்துக்களும் பள்ளிவாசல் உள்ளே சென்று பண்டிகை உணவுகளைப் பரிமாறி, உறவுகளைப் புதுப்பித்து உருவான உணர்வுகளை மறக்க முடியாத ஒன்றாக பலரும் பகிர்ந்து கொண்டமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஒளிவிழா நிகழ்விற்கு இந்துக்கள் இயேசு பிறப்பு கதை எழுதி நாடகமாக்கி அரகேற்றியமை பலராலும் பாராட்டப்பட்டது. இந்நிகழ்வுகள் நிகழ்த்தப்படும் சமயத்தலைவர்களின் உரைகள் அனைவரும் அனைத்து சமயவிழுமியங்களையும், பொதுத்தன்மைகளையும், தனிச்சிறப்புக்களையும் அறிந்துகொள்ள வாய்ப்பு உருவாகின்றது. குறிப்பாக, சிறுவர்களும், இளையோரும் இந்தக் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கெடுப்பது மன்னார் மாவட்டத்தின் எதிர்கால சமயநல்லிணக்கதிற்கு இப்போது இடப்படும் உறுதியான அத்திவாரம் ஆகும். சிறுவர்கள் இந்தக் கொண்டாட்ட நாட்களில் தமது பிறசமய நண்பர்களின் வீடுகளுக்குச் செல்லுதல், [illegible] ஆழப்படுத்தல் பார்ப்பதற்கு அழகும், உறவுக்கு [illegible] இந்தக் கொண்டாட்டங்கள். நல்லிணக்கம் தொடரும்.....

## அனர்த்தகால உதவிகள்



கோவிட் தொற்று உச்சக் கட்டத்தினை அடைந்து மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்ட காலப் பகுதியில் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும், வழிகாட்டுதல்களி லும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனமத பேதமின்றி உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அத்துடன் மக்களை பாதுகாக்கும் நோக்குடன் விழிப்புணர்வு கள் நடாத்தப்பட்டன, பொது இடங்களி லும், சமய ஸ்தலங்களிலும் கைகழுவும் தொட்டிகள் அமைக்கப் பட்டன. கோவிட் தடுப்பூசி போடுவதற்கான மக்களை அணிதிரட்டுவதற்கும், ஊக்கப்படுத்து வதற்கும் சமய நல்லிணக்க அணியினரும், இலக்கு கிராம மக்களும் அரச அதிகாரிகளுடன் இணைந்து பாரிய நடவடிக்கைகளை மேற் கொண்டார்கள். தடுப்பூசி போடுவ தற்கான மருத்துவ அதிகாரிகள் இலக்கு கிராமங்களை அடைந்தபோது சமய நல்லிணக்க குழு உறுப்பினர்கள் தம்மால் முடிந்த உதவிகளைப் புரிந்தார்கள். மக்களை ஒழுங்குபடுத்து தல், இடங்களைத் தயார்படுத்துதல், உணவு வழங்குதல், தகவல்களை சேகரித்தல் முதலான செயற்பாடு களிலும் ஈடுபட்டார்கள்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட நெருக்கமான உறவின் காரணமாக சமய நல்லிணக்கக் குழுக்கள் பொதுச் சுகாதார அதிகாரிகளை தமது மாதாந்த கூட்டங்களுக்கு அழைத்து மக்களுக் கான விழிப்புணர்களை நடாத்தினார் கள். முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், இடைவெளி பேணுதல் முதலான கருத்தூட்டல்கள் மக்களுக்கு வழங்கப் பட்டன. மிகவும் இறுக்கமான காலகட்டங்களில் பொதுக்கூட்டங் களைத் தவிர்த்து சிறு சிறு குழுக்களாக சில உறுப்பினர்களின் வீடுகளிலும் இந்த விழிப்புணர்வுகள் வழங்கப்பட் டன. மக்கள் சமய வேறுபாடுகளின்றி ஒரே சமூகமாக இவற்றில் பங்கெடுத் தமை குறிப்பிடத்தக்கது.

அரசின் புதிய கொள்கையாக இரசாயன உரம் தடைசெய்யப்பட்ட போது இந்நிறுவனம் சமய நல்லிணக்க திட்டத்தின் ஊடாக கூட்டுப்பசளை தயாரித்தல், வீட்டுத் தோட்டம் செய்தல், பாரம்பரிய விதை உற்பத்தி, சேமிப்பு, பண்டைமாற்று முறைமைகள் முதலான விடயங்களை முன்னிலைப் படுத்தி விழிப்புணர்வுகள் ஊட்டப்பட்டன. இப்படியான பல செயற்பாடுகள் காலத்தின் தேவைக்கும், மக்களின் மேம்பாட்டிற்குமாக முன்னெடுக்கப் பட்டன, இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமண தம்பதிகளுக்கான மனோதத்துவ நிபுணர்களின் அழகான உபதேசங்கள்...

## புதுமண தம்பதிகளுக்கான மனோதத்துவ நிபுணர்களின் அழகான உபதேசங்கள்...

1: கணவன்/மனைவி ஒருவருக்கொருவர் காதல் கொண்டிருந்தாலும் பணம் இல்லையேல் உங்கள் இல்லற வாழ்வில் மகிழ்ச்சி இல்லை, அடுத்து ஒரு ஐந்து வருடத்திற்கு என பணத்தை சேமித்து வைக்க கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே திட்டம் வகுத்திடுங்கள்,

2: நானே பெரியவன் நானே ஆண்மகன்/சிறந்தவன், நான் படித்தவள் எனக்கு எல்லாம் தெரியும் என்ற அகந்தையை விடுங்கள், மனைவியிடம் தோல்வியை ஒப்புக் கொள்ளுங்கள், உங்கள் கணவர் உங்களுக்காக பிறந்தவர் அவரிடம் தோற்றுப்போவதில் எந்த தவறுமில்லை,

3: அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள், உங்கள் கணவன் அல்லது மனைவியின் பேச்சையும் கூர்ந்து கவனியுங்கள்,

4: உங்களுக்கிடையே அதிகமாக பரிசு கொடுத்துக் கொள்ளுங்கள், அந்த பரிசின் நினைவுகள் உங்களை விட்டு நீங்காது, அவர்கள் உங்களை அதிகமாக தேடிடுவர், அது உங்களின் காதலை மேலும் அதிகரிக்கத்தான் செய்யும்,

5: எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள், உங்கள் துணையிடம் குரலை உயர்த்தி பேசாதீர்கள், தவறு யாரிடம் இருந்தாலும் முதலில் நீங்களே மன்னிப்பு கேட்டு விட்டுக்கொடுங்கள்,

6: மண வாழ்க்கையில் சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும், நான் சொன்னதுதான் சரி என்று வீண் வாதம் செய்யாதீர்கள், உங்கள் கணவனுக்கு/மனைவிக்கு பிடிக்காத ஒன்றை செய்ய வேண்டும் என்று ஒருநாளும் நினைக்காதீர்கள், அது உங்களிடையே பிரச்சினையைதான் அதிகம் தூண்டும்,

7: உண்மை எது? பொய் எது?" என்று தெரியாமல் இங்கே அங்கே என அடுத்தவர் சொல்வதை, கேட்டதை, கொண்டு உங்கள் துணையை நீங்களே மட்டம் தாழ்த்தாதீர்கள்,

8: புதுமண தம்பதிகளான உங்களுக்கு மண வாழ்க்கை திருப்தி இல்லாத, அல்லது இன்னும் கல்யாணம் ஆகாதவர் உங்கள் மீதும் அல்லது உங்களின் வாழ்க்கை மீதும் பொறாமை படக்கூடும், அதாவது கண்ணுப்படும், சில விஷயங்களில் பெரியோர்களின் சொல்படி கேட்டு நடப்பதும் மிகவும் அவசியம், இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று பெரியோர்களை உதாசிணப்படுத்திவிடாதீர்கள், அவர்களின் ஆசியில்தான் நீங்கள் கணவன் மனைவியாக இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்,

9: பணத்தை வீண்விரயம் செய்யாதீர்கள், ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசை கொள்ளாதீர்கள், உண்மையில் ஆடம்பரமாக வாழ்கிறவர்கள் பலரும் தங்களுடைய இல்லற வாழ்க்கையில் சந்தோஷமாக வாழ்வதில்லை என்பதை தெரிந்துகொள்ளுங்கள்,

10: எல்லோரிடமும் உங்கள் வாழ்க்கையின் எல்லா விஷயங்களையும், சொல்லிக் கொண்டிருக்காதீர்கள், உங்கள் துணையை நீங்கள் கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் உடனே அதை நம்பியும் விடாதீர்கள்,

11. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், உங்கள் துணையின் கருத்துக்களையும் யோசனை களையும் கொஞ்சம் காது கொடுத்து கேளுங்கள்,

12. உங்களுக்கு கல்யாணமாகிவிட்டது நீங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு செல்கிறீர்கள், ஆதலால் செல்லும் இடத்தில் மரியாதையை கொடுத்து மரியாதையை பெற்று, இனிய இதமான சொற்களை கொண்டு பேச பழகிக்கொள்ளுங்கள்,

13. புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்துக் கொள்ளாதீர்கள்,

14. பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து தன்னடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள். நிறைய பெண்களுக்கு அளவோடு பேசும் ஆண்களைதான் பிடிக்கும்,

15. உங்கள் கணவருக்கு அல்லது மனைவிக்கு பிடித்தவை எவையென தேடுங்கள், அதை தெரிந்துகொண்டு அவ்வப்போது அவர்களுக்கு சர்பிரஸ் கொடுத்துவிடுங்கள்,

16. பிரச்சனைகள் ஏற்படும் போது அவள்/அவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள், முடிந்த வரை பிரச்சினையை முடிக்க முயற்சி செய்யுங்கள்,

ஏனெனில் இங்கே நிறைய பேருக்கு அவர்கள் ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைத்துவிடும், ஆனால் கிடைத்த அந்த வாழ்க்கையைதான் அவர்களுக்கு தக்கவைத்துக்கொள்ள தெரிவதில்லை, அந்த தவறை நீங்களும் செய்து விடாதீர்கள்,

17. முடிந்த அளவில் குடும்ப செலவைக் குறையுங்கள். முடிந்த அளவில் சேமிப்பை அதிகப்படுத்துங்கள்,

18. இறை விசுவாசத்தில் அழமாக வாழப் பழகிக்கொள்ளுங்கள்

# நம்முடைய மரணம்!!

மனிதா..!!!
உன்குடும்ப கௌரவம்,பணம்
பட்டம்,பதவி என்று வாழும்போது
"வாழாமல்"உன்னை நீயே ஏமாற்றிக்
கொள்ளவேண்டாம். உன் குழந்தைகளுக்கு
அத்தியாவசிய தேவைக்கு மட்டும் சேர்த்து
வை.அதிகமாக உழைத்து, உன் வாழ்க்கையை
வாழாமல் இழந்துவிடாதே.. இறுதியில் உன்னுடன்
வருவது நீ செய்த நற்காரியங்கள் தான்.இதை மனதில்
நினைத்து ஒவ்வொரு நாளும் செயல்பட்டால் இந்த
உலகத்திலும்,இறந்த பின்னும்
நன்மையடைவாய்.நல்லவனுக்கு மரணம்
முடிவல்ல..கொடியவனுக்கு
மரணம் முடிவாகும்! இன்று தெருவில், ஊரில்,
அலுவலகத்தில், அண்டை வீட்டில் வயலில் எங்கும்
மனித உள்ளங்களில் வாழ்! இதழ்கள் புன்னகை
வீசட்டும். அன்பு கருணை கண்ணில்
ஒளிரட்டும்!கைகள்
உதவிட எழும்பட்டும்! எரிமேட்டில் புகையாக
வெளிப்படும்முன், ஒருபிடி சாம்பலாக மாறும்முன்
இல்லை கல்லறை
கூட்டுக்குள் உடல்
அடங்குமுன் அடுத்தவர் உள்ளங்களில் இடம் பிடி.
அன்பை தூவி வாழு! பணத்தை கட்டிக்கொண்டு?
அழாதே! மற்றவர் மனம் நோகும்படி வாழாதே!
வாழ்க்கை என்பது ஓட்டப்பந்தயம் அல்ல..நடை பழகும்
வண்டி. ஞாபகம் கொள் மனிதா!

# கோபம் இருந்தால் மகிழ்ச்சி இருக்காது.

கோபம் இருக்கும் இடத்தில் குணம் இருக்கும் என்பது பழமொழி ஆனால், கோபம் இருந்தால் அதன் பின் என்ன நல்ல குணம் இருந்தாலும் அதனால் பயனில்லை என்பதே தற்கால நிதர்சனம். கோபம் இருந்தால் மகிழ்ச்சி இருக்காது.குடும்ப உறவுகள் பல பிரச்னைக்குள்ளாவதே கோபத்தால் தான். இதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வதே இல்லை. Image Credit கோபம் இருந்தால் மகிழ்ச்சி இருக்காது துவக்கத்தில் கோபத்தால், பல நட்புகளை இழந்தேன்.

பின்னர் என்ன பிரச்சனை? என்று சுயபரிசோதனை செய்து, பிரச்சனைகளுக்குக் காரணம் கோபம் தான் என்று அறிந்து அதை நிறுத்திய பிறகு அனைத்தும் சுகமானது.

கோபம் இருப்பவரிடம் எவரும் பழக மாட்டார்கள், பழக வேண்டிய சூழ்நிலை வந்தால், வேண்டா வெறுப்பாகப் பேசுவார்கள். கோபத்தால் அடைவதை விட இழப்பதே அதிகம் இருக்கும்.

குடும்பத்தில் இருவரில் ஒரு வாழ்க்கைத் துணையிடம் கோபம் இருந்தாலும் அக்குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. இருவருமே கோபக்காரர்கள் என்றால் அக் குடும்பமே நரகத்தில் தான் தினமும் வாழ்க்கை நடத்தும்.கோபத்தால் எதையுமே சாதிக்க முடியாது ஆனால், அதைப் புரிந்து கொள்ளாமல் கோபப்பட்டு அந்தச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கி கொள்வார்கள்.

தாங்கள் செய்வது தான் சரி என்று வாதிடுவார்கள்.கோபத்தில் இருக்கும் போது எதுவுமே புரியாது, யார் என்ன கூறினாலும் தவறாகவே தோன்றும், நல்லதை கூறினாலும் ஏற்றுக்கொள்ளச் சுயகௌரவம் (Ego) தடுக்கும்.தற்காலப் பெற்றோர் தற்போது குடும்பங்களில் பிரச்சனைகளுக்கு முக்கியக் காரணமே கோபம் தான். இதைப் பலர் உணர்வதே இல்லை. குறிப்பாகக் குழந்தைகளிடம் கோபத்தைக் காட்டினால் நிலைமை மேலும் மோசமாகும். இதைத் தற்காலப் பெரும்பான்மை பெற்றோர் உணர்வதில்லை. இவர்களே யார் சொல்வதையும் கேட்க மாட்டார்கள் ஆனால், குழந்தைகள் கேட்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். குழந்தைகளிடம் சில நிமிடங்கள் செலவழித்துப் பொறுமையாக எடுத்துக்கூறினால் எளிதாகப் பிரச்சனைகள் முடிந்துவிடும்.

ஆனால், [illegible] பொறுமை இழந்து கத்தி, கோபப்பட்டு [illegible]

கோபம் தொடரும்......

# அவனியில் வாழ்ந்தோர் அழியாத நினைவுகளாய்..!

## கவிதை பூக்கள்

மனிதனாய் வாழ மண்ணிலே பிறந்து
மரமாய் வளர்ந்து பல மாற்றங்கள் புரிந்து
மண்ணுலகில் வாழ்ந்தது போதுமென உணர்ந்து
விண்ணுலகு சென்ற மானிலத்து உறவுகளே...!

பாசமழை பொழிந்து பக்குவமாய் நடந்து
நேசமதை நெஞ்சிலே நிலையாக நிறுத்தி
ஆனந்த மழையில் எம்மை அலைபாய விட்டு – நீங்கள்
ஆண்டவன் அடி சென்ற அவலம் தான் என்னவோ...?

அதிகாலை எழுந்து ஆண்டவனைப் பணியுங்கள்
ஆறுதல் உங்களுக்கு அனுதினமும் கிடைக்கும் - என்று
ஆழமான இறைபக்தியை எம் ஆன்மாவில் விதைத்து விட்டு
ஆறடி நிலத்திலே நீங்கள் அமைதி கொண்டதென்ன?

பாரிலே நீங்கள் பணிவாய் வாழுங்கள்!
காரியவாதிகளிடம் கவனமாய் நடவுங்கள்!
ஊதியம் இல்லாமல் உதவிகள் செய்திடுங்கள்
உண்மையாய் நடந்து உவப்புடன் வாழ்ந்திடுங்கள் - என
உரைத்த நீங்கள் உன்னத தேவனைக் காண உவப்புடன்
சென்றீர்களோ?

பெற்றோரை பெரியோரை மதித்து நடவுங்கள் - என்று
கற்றுத்தந்த நீங்கள் காணாமல் போன மாயமென்ன?
கன்னிமரியிடம் கண்கலங்கி வேண்டிடுங்கள் - அவள்
கவனமாய் உங்கள் கவலைகளை போக்குவாள் - என்று
காதோரம் சொல்லி விட்டு கடவுளைக் காண கனதூரம்
சென்றீர்களோ?

உங்களை இழந்த தவிப்பால் உறுதியற்றுப் போனோமே..!
உயர்வான இடத்தில் நீங்கள் உன்னதருடன் இருங்கள்
உயிர்ப்பு உண்டென்ற உன்னதரின் வார்த்தையை நம்பி – நாம்
உலக முடிவில் ஒருநாள் ஒன்றாக சந்திப்போம்..!

அ. ஜெஸ்மின் ஷரோன் ஆவணம்

# என் இறைவா, என் ஆன்மா உமக்காக ஏங்குகின்றது



அ. டெல்சியஸ்
இறையியல் பீடம்
தேசிய குருமடம்,
கண்டி.

எழுது கோலை எடுத்து உந்தன்
பழுது இல்லா வாழ்வை எண்ணி
தொழுது தேவன் திருமுன் வந்தேன்
எழுதி வைக்க வார்த்தை அள்ளி

பதினோராறாண்டுகள் பாரில்
அதி விஷேட வாழ்வை வாழ்ந்து
விதியின் கண் காலப் போரில்
துதிபாடி சேர்ந்தீர் மறைந்து

அன்பிற்கிலக்கணமாய் அகிலத்திற்கோர் பாடம்
பண்பினில் மாசற்ற படைத்தவனின் மறுரூபம்
தன்மையே இல்லாமல் தலைக்கணமாய் ஆடும்
வன்மையின் மனிதரையும் அணைத்திடும் அதிரூபம்

இறைவழிபாடு என்ன என்பதை
நிறை மனத்துடன் எடுத்துச் சொன்னீர்
மறை பரப்புதலும் வாழ்வென்பதை
அறை கூவலாய் பொழிந்து நின்றீர்

ஆன்மாவே எனது ஆதாயம் என்றும்
ஆன்மீக வாழ்வில் ஆழவேரூன்றினீர்
வான் மனப்பந்தலில் வஞ்சகம் இன்றியும்
தான்தோன்றித்தனமாய் வாழ்வதை தவிர்த்தீர்

அலர்ந்த மலருக்கு பெருமை என்றும்
உலரும் முன் தன் உபயோகத்தில்
பிறந்த மனிதனின் பெருமை என்றும்
இறக்கும் முன் தான் வாழ்ந்த வகையில்

கலைமானின் தாகத்தில் நீருக்கு ஏக்கம்
அலைபாயும் மனதில் அமைதிக்கு ஏக்கம்
நிலைமாறும் வாழ்வில் நிலைவாழ்வு எம் ஏக்கம்
விலையில்லா உம் ஆன்மா விடை காண ஏக்கம்

பாதங்கள் நடந்ததை பாதைகளே அறியும்
வாதங்கள் வதைத்ததை நீர் மட்டுமேயறிவீர்
மாதங்கள் கடந்ததை எம் மனங்களே அறியும்
நாதன் தன்னேரத்தை யாரிங்கு அறிந்திடுவார்

அதிகாலை எழுந்தவுடன் ஆண்டவரை தேடிவந்தீர்
கதிகலங்க வைத்தெம்மை கடவுளையோ நாடிச் சென்றீர்
விதி முடிந்ததென்று நீரும் மறு கரையை சென்றடைந்தீர்
அதிரூபன் வருகையினில் நீரும் உயித்தெழுந்திடுவீர்

வாழ்ந்த வாழ்வை எண்ணியோ மக்கள்
சூழ்ந்து நின்று சொரிந்தனர் கண்ணீர்
நீள் வானில் வைகறை மேகங்கள்
ஆழ் சோகத்திலோ கொட்டியது தண்ணீர்

எழுத தாளும் கோல் தன் மையும்
[illegible] நிறைந்து தான் போயினும்
அழுத கண்ணின் நீரை மையாக்கி
தொழுதிடுவோன் தன் ஏட்டில் எழுதிடுவான் தினமும்

# புதிய எண்ணங்கள் எனக்குள்ளே என்றும்

பிடித்தாலும் ஏதோ
பிடிக்காத மனநிலை தினந்தோறும்
சிரித்தாலும் ஏதோ
சிரிக்காத குணநிலை மனதோரம்
வாழ்வாலும் ஏதோ
வாழ்வாகாத நடுநிலை அறத்தோடும்
ஞாபகங்கள் வரும் போது
எல்லாம் இவையாக மாறும்

அன்பு என்பது உனக்காக
உன் உறவுகள் தருவது
பாசம் என்பது எல்லாராலும்
உன்னை மகிழ்விக்க கொடுப்பது
மரியாதை என்பது
உன்னாலும், பிறராலும் கொடுத்து
வாங்குவது
எளிமை என்பது உம் வாழ்கையில்
உனக்காக இறுதிவரை உமைக்காப்பது

பணத்தால் மடடும் அல்ல அன்பு
குணத்தாலும் கிடைக்கும்
சினத்தை நீ விட்டு விட்டால்
என்றும் வாழ்க்கை இனிமையாகும்
சிந்தித்துக் கொள் செயற்படுத்திக் கொள்
என்றும் இறுமாப்பு அடையாதே
சுற்றாறும் சூழ அச்சுவர்
வாழ் உன்னை போல் மற்றவரையும்
வாழவிடு

சிரிப்பது நல்லது ஆனால்
நீ பிறரையோ - இல்லை
பிறர் உன்னையோ பார்த்து
சிரித்து விடாது பார்
நல்ல எண்ணம்
இருக்கும் போது - என்றும்
நல்ல செயல்களும் எப்போதும்
எம் வாழ்வில் நடைபெறும்

புதிதாய் தோன்றும் எண்ணம்
என்றும் உன்னை வெல்ல வைக்கும்
நீயும் நல்லதாய் செய்யும் போது
வாழ்வில் வெற்றி என்றும் உன் பக்கம்
நிற்கும்
வாழ் நீயும் வாழும் வாழ்வினில்- உன்
உறவும் உன்னைச் சூழும்

*லீ. சாள்ஸ் சர்மிலன்*
*கப்புசின் மிஷன் ஹோம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200வது பிறந்த தினத்தில் மகிழும் திருச்சிலுவை கன்னியர்கள்

## 1822-2022

சிறப்புப் பார்வை



### அன்னை பேர்ணாடா ஹைம் காட்னர்
(Star of Menzingen)

**"Let us begin and new"** என்ற தாரக மந்திரத்தை தன் வாழ்விலே தன்னை முற்றிலும் இறைவனுக்காய் அர்ப்பணித்து இறைபணி செய்வதையே தம் பணியாகக்கொண்டு வாழ்ந்து இறைபதம் அடைந்த இலட்சியப் பெண் மணிகளின் வரிசையில் வைத்து கொண்டாடப்பட வேண்டிய வீரப்பெண்மணிதான் "அன்னை பேர்ணாடா ஹைம் காட்னர்." 2022 கார்த்திகை 26ஆம் நாள் அவளது 200ஆவது பிறந்த தினத்தை கொண்டாடி மகிழ்வதில் உலகெங்கும் வாழும் திருக்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரிகளாகிய நாம் பெருமிதம் அடைகிறோம். விசேடமாக இலங்கை திரு நாட்டில் பல்வேறு பணித்தளங்களில் பல்தரப்பட்ட பணிகளை ஆற்றிவருகின்ற எம் சகோதரிகள் கார்த்திகை 26ஆம் நாளில் எம் அன்னையோடு இணைந்து அவரது 200ஆவது ஆண்டு பிறப்பினை (1822-2022) எம் பங்குகளில், தமது பணி செய்கின்ற இடங்களில் இறைமக்கள் சமூகத்தோடு இணைந்து கொண்டாடி மகிழ்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அருட் சகோ. லூசில்டா
தி.சி.க.சபை
கற்கிடந்தகுளம்

திருச்சிலுவை கன்னியர் சபையின் ஸ்தாபகி அன்னை பேர்ணாடா டைம் காட்னர் அவர்கள் 1822 கார்த்திகைத்திங்கள் 26ஆம் நாளில் சுவிஸ்லாந்தில் உள்ள பிசிலிஸ்பாக் (Fislisbach) என்ற இயற்கை வளம் நிறைந்ந அன்பவனமான எழில் பொங்கும் பசுமை நிறை மரங்களையும, இதமாக பாய்ந்து ஓடும் நதிகளையும் கொண்டு இயற்கைக்கு ஒரு படி அழகு சேர்க்கும் சிற்றூர்தான் பிசிலிஸ்பாக். இறையரசுப்பணியில் ஒரு விழுது உருவாகு வதற்குரிய இடமாக இறைவனால் அடையாளப் படுத்தப்பட்ட சிற்றூரில் அன்னையானவள் பிறந்தாள்.

உலகில் சாதனை படைத்த மேதைகள் தம் பெயர் பொறிக்கப்பட வேண்டுமென்பதற்காக பல யாகங்களை செய்வதை கண்டு வியக்கும் காலத்தில் எல்லோருடைய மனங்களிலும் இடம் பிடித்தவள் எம் அன்னை.

பிரான்சியப்புரட்சி காரணமாக சீரழிந்து சின்னாபின்னமாக்கப்பட்ட இளம் தலைமுறையி னரை வழிநடத்தவும், அவர்களுக்கு பணிபுரிய வும் தம்மை முற்றிலும் கையளித்து சேரிகள் பாடசாலைகள், மக்கள் வாழும் வதிவிடங்களை தேடிச்சென்று பணிபுரிந்தவள். இறைதிட்டத்தின் படி ஆண்டவரிலே நம்பிக்கை வைத்து துறவியாக சிலுவைதான் இரட்சணியம் என்பதை உள்ளத்திலே கொண்டு தளரா மனத்துடனும் அணையாத இறை விசுவாசத்துடனும் ஆசிரியராக பணிபுரிய முன்வந்தார். திருச் சிலுவையின் மகிமையை தன் வாழ்வாலே பலியாக்கிய ஓர் அன்னையானவள், தான் சந்தித்த சவால்களில் இறைவனிலே அவள் கொண்டிருந்த அன்பின் மிகுதியாலும் நற்கருணையில் அவள் கொண்டிருந்த விசுவாசத்தாலும், இறை நம்பிக்கையினாலும் எத்தனை சோதனைகளையும் வேதனை களையும் சந்திக்க நேரிட்ட வேளையில் மனம் தளர்ந்து போகாது சாதித்தவள் அன்னை பேரணாடா. இது கடவுளிடம் அவள் கொண்டுள்ள பற்றையும் செபத்தின் ஆழத்தையும் எடுத்தியம்பி நிற்கின்றது.

**"She is an inspirational women"**

அர்ப்பண வாழ்வில் எதை செய்ய வேண்டும் எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். என்று முன்கூட்டியே அறிந்தவள். இறைதிட்டம் நிறைவேற தன்திட்டம் அறிந்து அதற்காக தன்னை அற்பணித்தவள். தாயாக சகோதரியாக

## திருச்சிலுவை கன்னியர் சபையின் ஸ்தாபகி

வறுமையுற்ற குடும்பத்தில் பாதணி உற்பத்தி செய்யும் தொழிலையே செய்து வந்தாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அசைக்க முடியாத விசுவாச சத்தியங் களை தன் வாழிவிலே கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய தந்தையின் இறப்பை சிறு வயதிலே அனுபவித்தவளாக இறை சித்தத்தை நிறைவேற்ற அடியெடுத்து வைத்தாள்.

அவரது இயற்பெயர் "மரியானா" குடும்பத்தில் 04வது பெண் குழந்தையாக பிறந்தவள் அன்னை இறைவிசுவாசத்தில் வேரூன்ற அடித்தளமிட்டது அவள் பிறந்த குடும்பம். வறுமையின்பிடியும் தெய்வபயமும் எடுத்துக்காட்டான வாழ்க்கையும், தன்னம்பிக் கையும் தாம் சந்திக்கின்ற சவால்கள் சோதனை களுக்கும் முகம் கொடுக்கக்கற்றுக் கொண்டா ள். சிலுவையை தன் வாழ்வில் அடிநாதமாகக் கொண்டு சிலுவையிலே இரட்சிப்பும், மகிமையும் கொண்டாள். 'She chooses the cross she bore the cross she trumped in the cross.

தன்னுடன் பயணித்த அருட்சகோதரிகளுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவள்.

**"Mother Bernada nray;திறன் மிக்கவர்"**

தன் சிந்தையில் உதிப்பதை அப்படியே வாழ்ந்து காட்ட வேண்டும் என்று உத்வேகமும் விடாமுயற்சியும் கொண்டவர். சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் பின்னிப்பிணைந்த ஒற்றுமையையும் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தவர். தன்னையும் தன்னால் இயக்கப்படுகின்ற நிறுவனங்கள் சபையின் ஸ்தாபகத்திலும் உண்மைக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்தவள்.

**"She is a understanding women"**

தன் வாழ்வில் யார்தான் எதிர்த்து நின்றபோதும் இறைவன் மேல் கொண்டுள்ள எல்லையில்லாத் தெய்வீக சக்தியால் தன்னையும் தன்னை சார்ந்தவர்களையும் மேலாக விளங்கிக்கொண்டு அவர்களுக்கு எப்போதும் நன்மை செய்யவேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டவளாக வாழ்ந்து காட்டியவள். *(அடுத்த இதழில் தொடரும்....)*

## கரோல் ....... 
*3ம் பக் தொடர்ச்சி......*

வில்லுப்பாடல்

**மேற்பிரிவு** முதலாம் இடம் கட்டைக்காடு பங்கு

வவுனியா மறைக்கோட்டம்
கரோல்பாடல்

**கீழ்ப்பிரிவு**
முதலாம் இடம் - இறம்பைக்குளம் பங்கு

சிறந்த இசையமைப்பு, பாடல் வரிகள்- இறம்பைக்குளம் பங்கு

**மேற்பிரிவு**
முதலாம் இடம் - வேப்பங்குளம் பங்கு
இரண்டாம் இடம் - கோமரசன் குளம் பங்கு
மூன்றாம் இடம் - இறம்பைக்குளம் பங்கு
நான்காம் இடம் - பம்பைமடு, பங்கு
சிறந்த இசையமைப்பு - வேப்பங்குளம் பங்கு
சிறந்த பாடல் வரிகள் - கோமரசன் குளம் பங்கு

வில்லுப்பாடல்

**மேற்பிரிவு**
முதலாம் இடம் - வேப்பங்குளம் பங்கு

நத்தார் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட 2022ம் ஆண்டிற்கான கரோல் பாடல் போட்டியில் கலந்து கொண்ட பாடகர்கள், பயிற்றுவிப் பாளர்கள், ஒழுங்கமைப்பு செய்த பங்குதந்தை யர்கள், அருட்சகோதரிகள், மறைக்கோட்ட ரீதியாக ஆயத்தம் செய்த கோட்ட முதல்வர்கள், நடுவர்களாக பணியாற்றியவர்கள், பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த அருட்பணி. P.கிறிஸ்துநாயகம் அடிகளார் (குருமுதல்வர் மன்னார் மறைமாவட்டம்) அவர்கள் மற்றும் ஒலி, ஒளி அமைப்பாளர்கள், கலையருவி நிலைய பணியாளர்கள் மற்றும் கலைஞர் மன்ற உறுப்பினர்களாக உதவி புரிந்த அனைவருக் கும், மற்றும் சிறப்பாக வவுனியா மறைக் கோட்ட முதல்வர் அன்பிற்க்கும் பெருமதிப்பிற் குரிய அருட்பணி அலெக்சாண்டர் ஆரோக்கியம் அடிகளார் தமது பங்கு மக்களோடு இணைந்து இந்நிகழ்வுக்கு சகல வழிகளிலும் ஒழுங்குகள் செய்திருந்தார் ஆகவே உதவிய அனை வருக்கும் நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## கலாத்தியர், எபேசியர் திருமுகங்கள்

**இடமிருந்து வலம்இடமிருந்து வலம்**
1. அவர் .................................. இயேசு கிறிஸ்து .......................குறித்து வைத்தார்.
2. .....................யின் ஏமாற்று........ .......................... அணிந்து கொள்ளுங்கள்.
3. நான் ............................. யாக இருக்கிறேன்.
6. ..............................ச் சொல்..... ..................... விட்டு நீங்குங்கள்.
7. ..................... வழியாய் செயலாற்றும் நம்பிக்கை ஒன்றே இன்றியமையாதது.
11. .................................. மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள்.
16. கிறிஸ்துவின் .................. கட்டடம்....... ............. பெறுகிறது.
17...................காட்டுவது எப்பொழுதும் நல்லதே.
20..................அருந்தி .................ஆளாகாதீர்கள்.

**வலமிருந்து இடம் வலமிருந்து இடம்**
2. ............................. க் காலத்தில் சில ............தோன்றியுள்ளன.
5. அவரே நமக்கு...................... அருள்பவர்.
8 ......................... நாடுவது........................... நல்லெண்ணமா?
9. .................... ப்பட்ட கைதிகளை இழுத்துச் சென்றார்.
10. ............................. ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள்.
12. ஊனியலின் செயல்களுள் ஒன்று.............................
17. அந்த ................................ அப்பா தந்தையே எனக் கூப்பிடுகிறது.
23. அன்பே வாழ்வுக்கு.............................

**மேலிருந்து கீழ்மேலிருந்து கீழ்**
1. தூய ஆவியின் கனிகளுள் ஒன்று ..................
4. கறை ............................ யோ.............. இப்படிச் செய்தார்.
5. ...............அவ்வாறு உண்பதை விட்டுவிட்டார்.
8. ......................... சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்.
9. நான்......................... சிலிசியப் பகுதிகளுக்குச் சென்றேன்.
12..................மலை இப்பொழுதிருக்கும் எருசலேமுக்கு அடையாளம்.
13. எல்லாவற்றிலும் நாம்.................................. வேண்டும் (ஒரு எழுத்து மாறியுள்ளது)
14. திருச்சபையே அவரது ..........................
18. .............................உலகிலும் .........................அவரை உயர்த்தினார்.
19...........என்றும் ........................இல்லை.

**கீழிருந்து மேல் கீழிருந்து மேல்**
6. என் வயதினர் ............................. ரைவிட யூத நெறியில் சிறந்து விளங்கினேன்.
7. கிறிஸ்து ................................... நிலையிலிருந்து ........................ ..........அளித்துள்ளார்.
8. ஒரு.................................. யேனும் அவர்களுக்கு அடிபணியவில்லை.
15. ........................................ மன்னிப்புப் பெறுகிறோம்.
17. மக்களினங்களின் அனைத்தும் ............ .............பெறும்.
20. ..........................யின் மீதும் அன்பு செலுத்த வேண்டும்.
21. அவள் மகனையும் துரத்தி ...........................................
22. எல்லா...................................... களையும் எழுப்புங்கள்.
23. ...........................பெறுவீர்களாக.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 233

பாடசாலை மாணவர்களிற்காண

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | | 03 | 04 | | 05 |
| | ★ | | ★ | ★ | 06 | | | ★ | |
| | ★ | 07 | | | | 08 | ★ | | 09 |
| | 10 | ★ | 11 | | | | ★ | ★ | |
| | | | 12 | ★ | 13 | | 14 | ★ | |
| 15 | ★ | ★ | | ★ | | ★ | | ★ | ★ |
| ★ | | ★ | | 16 | | | | ★ | |
| | 17 | | 18 | | ★ | 19 | | ★ | |
| | ★ | ★ | | | ★ | | | ★ | |
| 20 | | ★ | | 21 | ★ | | 22 | | 23 |

வலுவூட்டல் செயற்பாடு

உங்கள் விடைகளை மார்கழி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
(பதிப்பாசிரியர்)

**உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி இல.233, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.**

1. தே. இருதயமலர், சாளாம்பன்
2. தொ. தேவராசா, சாளாம்பன்
3. டிவைன்ஷிகா, சாளாம்பன்
4. யோ. கணுஷிகா, சாளாம்பன்
5. மடோனா, ஆசிக்குளம்
6. கலிஸ்ரஸ், ஆசிக்குளம்
7. கல்பனா, ஆசிக்குளம்
8. இருதயமேரி, ஆசிக்குளம்
9. யே. தர்சினி, வவுனியா
10. அபி, புதுக்கமம்
11. பெபிஷா, புதுக்கமம்
12. றூ. மேரி பிறக்சி டயஸ், வங்காலை
13. றூ. ஹறிஸ்மா டலிமா, வங்காலை
14. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா, வங்காலை
15. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா, வங்காலை
16. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம்
17. வின்சன் யோகவதி, பெரியநீலாசேனை
18. அன்ரன் ஜெயக்குமார் அபர்ணா, தோட்டவெளி
19. அன்ரன் ஜெயக்குமார், தோட்டவெளி
20. ம. லில்லி, பெற்றா
21. பிளண்ரீனா, மன்னார்
22. சறோஜினி, யோசப்வாஸ்நகர்
23. தக்ஷிகா, யோசப்வாஸ்நகர்
24. தவராஜன் சந்தோஷ், யோசப்வாஸ்நகர்
25. தனுசிகா, சாவற்கட்டு
26. சுஜாந்தினி, சாவற்கட்டு
27. லிவி பிகிறாடோ, பள்ளிமுனை
28. றேச்சல், பள்ளிமுனை
29. ரேறியன், பள்ளிமுனை
30. எமி பிகிறாடோ, பள்ளிமுனை
31. றெ. லஷோன்ரன், பெரிய பண்டிவிரிச்சான்
32. வி. மேரி றெஜினா, சின்னப்பண்டிவிரிச்சான்
33. சி. வின்சன் யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான்
34. கவியாழினி, சின்னப்பண்டிவிரிச்சான்
35. வயலட் யோண், யாழ்ப்பாணம்
36. சாறா, மாவிலங்கேணி
37. ஜெகநாதன், மடுக்கரை
38. டென்சியா பெரேரா, பேசாலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மன்னா

## நினைவு கூருகின்றோம்

### 31ம் நாள் நினைவு, 1ம் ஆண்டு நினைவு



| பிறப்பு | | பிறப்பு |
|---|---|---|
| 1932 | | 1940 |
| 08 | | 07 |
| 08 | | 04 |
| இறப்பு | | இறப்பு |
| 2022 | | 2021 |
| 10 | | 09 |
| 23 | | 22 |

அமரர். பாவிலு செபமாலை — அமரர். செபமாலை திரேசம்மா

மாவிலங்கேணி, முருங்கன்

உடலால் எம்மை பிரிந்தாலும், கண்களை விட்டு கடந்தாலும், உள்ளத்தாலும், உணர்வுகளாலும் என்றுமே எம்முடன் வாழ்கின்றீர்கள் கண்களில் கண்ணீர் முத்துக்களுடன் நிற்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும் : மருமகன், மகள், பேரன்.

### 36ம், 04ம் ஆண்டு நினைவுகள்



| பிறப்பு | | பிறப்பு |
|---|---|---|
| 24 | | 23 |
| 12 | | 03 |
| 1923 | | 1933 |
| இறப்பு | | இறப்பு |
| 13 | | 16 |
| 01 | | 11 |
| 1986 | | 2018 |

அமரர். R.K. பேரேட்னம் — அமரர். K.J. பவுலினம்மா

மண்ணில் எம்மை விட்டுச்சென்று விண்ணில் இருந்து எம்மை பாதுகாத்து வழிநடத்தும் எம்பெற்றோருக்கு எமது அஞ்சலிகள்

**பிரிவால் துயருறும்**

பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள், பூட்டக்குழந்தைகள், உறவினர்கள்

### விண்ணகப் பிறப்பின் 2ம் ஆண்டு நினைவு



| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 06 | | 18 |
| 05 | | 10 |
| 1948 | | 2020 |

அமரர் சந்தியோகு யேசுதாசன் (தமிழியாஸ்)

(பள்ளக்கமம், முருங்கன்)

"எதுவும் உன்னை தொந்தரவு செய்ய வேண்டாம் எதுவும் உனக்கு அச்சம் தர வேண்டாம், எல்லாம் கடந்து விடும். மாறிவிடும் கடவுள் ஒருவரே மாறாதவர் பொறுமை அனைத்தையும் வெல்லும். உன்னிடம் கடவுள் இருந்தால் உனக்கு குறையொன்றும் இல்லை கடவுளே நம் நிறைவு இன்றும் என்றும்"

பிரிவால் நினைந்துருகும்: அருட்பணி. ஜெஸ்லி ஜெகானந்தன் (மகன்) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

### 1ம் ஆண்டு நினைவு



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 | | 11 |
| 12 | | 12 |
| 1956 | | 2021 |

அமரர். சகாயசீலன் மாசில்லா தேவகி

( [illegible] )

[illegible]

பிரிவில் துயருறும் குடும்பத்தினர்

### 17ம் ஆண்டு நினைவு



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 | | 08 |
| 10 | | 11 |
| 1934 | | 2005 |

அமரர் , பேதுரு செபமணி அருளம்மா

முருங்கன்கமம், முருங்கன்

இப்பூவுலக வாழ்வைத் துறந்து, மறுவுலக வாழ்வைத் தேடிச்சென்ற அம்மா உங்களைப் பிரிந்த துயர அதிர்வுகள் நெஞ்சின் அலைகளாக, ஓயாது ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. எங்கள் குடும்பத்தின் மூத்த தலைவியாய் இருந்து அன்பையும், பாசத்தையும், அர்ப்பணிப்புக்கு வரைவிலக்கணமாகத் திகழ்ந்த உங்களை மறவோம் அம்மா !

பிரிவால் துயருறும்: அன்புக்கணவன் பேதுரு பாசமுள்ள பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்


சர்வதேச அங்கீகாரம் பெற்ற

விமான பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

metro Travels

IATA Accredited Agent

எமது சேவைகள்

- மிகக்குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுகள்
- சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
- உள்நாட்டு வெளிநாட்டு பிரயாணிகளுக்குமான சுற்றுலா ஏற்பாடுகள்
- சகல நாடுகளுக்குமான காப்புறுதி வசதிகள்
- முற்பிரயாண வசதிகள்

இவை அனைத்தையும் பெற்றுக்கொள்ள... Mannar Branch :- 1/2, KSJ Building, Sebastian Road, Mannar. Tel :- 94-23 225 1823


### விண்ணக பிறப்பின் 10ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 | | 22 |
| 04 | | 11 |
| 1927 | | 2012 |

அமரர் . பேதுருப்பிள்ளை சந்தியாபிள்ளை

(மோட்டக்கடை, [illegible])

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் மகுடமாய் இகமதில் வாழ்ந்த எம் - ஐயாவே !
அனைவரையும் அன்பு செய்தும் அனைவராலும்
அன்பு செய்யப்பட்டும் இவ்வுலகில் வாழ்ந்தீர்கள்.
ஏழ்மையிலும் ஏழைக்கு இரங்கி இறைவழியிலும் இறைபக்தியிலும்
வாழ வழிகாட்டி சென்றீர்கள். தாயின் இடத்தில் தாயாக, தந்தையின்
இடத்தில் தியாகத் தந்தையாக எம் நல் வாழ்வுக்காய் உங்கள்
வாழ்வுப்பாதையில் பல துன்பங்களை சுமந்தாலும் இறை அன்பில்,
நம்பிக்கையில் உறுதியோடு வாழ்ந்து காட்டினீர்கள்.
உங்கள் வாழ்வுக்காக நன்றி கூறுகின்றோம் - ஐயா !

உங்களின் ஆன்மா இறைவனில் என்றும் மகிழ்ந்திருக்க பிராத்திக்கின்றோம்தாங்கை ( அருட்சகோதரி), பிள்ளைகள் (அருட்சகோதரிகள்), மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்.


மன்னா பத்திரிகை

மன்னார் அலுவலகம், கலையருவி,

இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.

தொ.இல: 023-2250789, 076-3801841

mannamnrc@gmail.com, manna.lk, Mannar Catholic Media, Madhu Matha TV

மன்னார் கத்தோலிக்க அச்சகம்

கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.

தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com

சகல விதமான பதிப்புக வேலைகளும் நியாயமான விலையிலும், தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தினரால் மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு மன்னார் நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org